Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
• INDEPENDENTLY OWNED AND OPERATED
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc. Brokerage *
1711 McCowan Rd. #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

17 வது வருடத்தில்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com
416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 17 | பாலம் 05 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 01, 2007



உலக கிண்ணம் 2007

06



உலக மகளிர் தினம் மார்ச் 08, 2007

04

# அமெரிக்க, இத்தாலிய தூதுவர்கள் மயிரிழையில் தப்பினர்!

வெளிநாட்டு ராஜதந்திரிகள், சர்வதேச தொண்டர் அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளடங்கிய உயர்மட்டக் குழுவை மட்டு நகருக்கு ஏற்றிச்சென்ற இரண்டு உலங்கு வானூர்திகள் மட்டுநகரில் தரையிறங்கிய போது புலிகளின் “செல்” தாக்குதலுக்கு உள்ளாகியது. அமெரிக்கத் தூதுவர் றொபேர்ட் ஓ பிளேக், இத்தாலியின் இலங்கைத் தூதுவர் மற்றும் ஜேர்மன் நாட்டு தூதுவரக அதிகாரியும் சிறுகாயங்களுடன் உயிர்தப்பியுள்ளனர். அதிரடிப்படையினர், விமானப்படையினர் உட்பட பத்துக்கு மேற்பட்டவர்கள் காயம் அடைந்தும் உள்ளனர். இச்சமயத்தில் இக் குழுவுடன் சென்ற மனித உரிமைகள் விவகார அமைச்சர் உலங்கு வானூர்தியினுள்ளேயே இருந்துவிட்டதால் காயங்கள் எதுவுமின்றி தப்பிவிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்புக்கு அண்மையில் உள்ள வவுணதீவில் இருந்து ஏவப்பட்ட பத்துக்கும் மேற்பட்ட 120 மில்லி மீற்றர் ஆட்டிலறி எறிகணைகள் இராஜதந்திரிகள் பிராயணம் செய்த உலக்கு வானூர்திக்கு அண்மையில் வீழ்ந்து வெடித்துள்ளன. நான்கு எறிகணைகள் விமான ஓடு பாதையிலும், ஐந்து எறிகணைகள் விமானப் படைமுகாமிற்குள்ளும், இரண்டு எறிகணைகள் இலக்குத் தவறி வாவிக்குள்ளும் விழுந்து வெடித்துள்ளன.

இச்சம்பவத்தை தொடர்ந்து மட்டக்களப்பில் உள்ள அனைத்து அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் பாதுகாப்பு எச்சரிக்கையை ஐ.நா சபையின் கொழும்பு அலுவலகம் விடுத்துள்ளது. கிழக்கு மாகாணத்தை தவிர்த்து விடும்படியும் அறிவுறுத்தப்பட்டுள்ளது என அறியப்படுகின்றது.

“இது ஒரு துரதிஸ்டவசமான சம்பவம். நாம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளோம். இராணுவ மற்றும் அதிரடிப் படையினரின் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்துடன் நாம் தொடர்பு கொண்டுள்ளோம். எமது விசாரணைகளை நாம் இன்னமும் நிறைவு செய்யவில்லை. எனவே எம்மால் தற்போது எதுவும் கூறமுடியாது” என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு அதிகாரிகள் தாக்கப்பட்டது தொடர்பாக விடுதலைப்புலிகள் விடுத்துள்ள அறிக்கையில் “மட்டக்களப்பில் உள்ள 23-3 ஆவது பிரிக்கேட் தளத்தின் வெபர் விளையாட்டு மைதானத்தில் உலங்குவானூர்தியில் இருந்து இறங்க முற்பட்ட வேளை இடம்பெற்ற எறிகணை வீச்சு தாக்குதலில் காயமடைந்த வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு எமது ஆழ்ந்த கவலைகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேவேளை, சிறிலங்கா அரசாங்கம், வெளிநாட்டு இராஜதந்திரிகளை இராணுவ வலயத்துக்குள் உள்ள ஆட்டிலறி ஏவுதளத்திற்குள் இராஜதந்திர வழிமுறைகளை பின்பற்றாது அழைத்து வந்தது அவர்களின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் செயல். இது மிகவும் கண்டிக்கத்தக்கது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்துள்ளார். மேலும் அவர் குறிப்பிடும் போது “தாக்குதலுக்கு உள்ளான பகுதியில் வெளிநாட்டு இராஜதந்திரிகள் உள்ளதாக கிளிநொச்சியில் உள்ள ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு விவகாரங்களுக்கான இணைப்பாளர் மாட்டின் எமக்கு தெரியப்படுத்தியதும் எமது தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட்டன. பாதுகாப்பு நடவடிக்கைகளை புறக்கணித்து விட்டு இராஜதந்திரிகளை இராணுவ ஆட்டிலறி ஏவுதளத்திற்குள் சிறிலங்கா அரசாங்கம் அழைத்து வந்தது எமக்கு அதிர்ச்சியை அளிக்கிறது.” என்று தெரிவித்துள்ளார்.

இதே சமயம் இந்த தாக்குதலின் பின்னர், ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைமைப் பொறுப்பை வகிக்கும் ஜேர்மனி சார்பாக கருத்துக் கூறியுள்ள கொழும்புக்கான ஜேர்மனியத் தூதுவர் நேற்றைய தாக்குதலில் தான் மயிரிழையில் உயிர்தப்பியதாகவும், சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் உடனடியாக தாக்குதல்களை நிறுத்தி மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியம் வலியுருத்துவதாக கருத்து வெளியிட்டுள்ளார்.

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

Bright Future of Your Child
உங்கள் குழந்தையின் சிறப்பான எதிர்காலம்
is determined by these equations.
Education = Intelligence + Characters
Performance = Knowledge x Believe x Action
பின்வரும் சமன்பாடுகளால் தீர்மானிக்கப்படுகிறது
கல்வி = அறிவுத்திறன் + பண்புகள்
நிறைவேற்றுத்திறன் = அறிவு x நம்பிக்கை x செயல்

Classes for Children 7 to 16 years old
KG Master
416.725.5112 or 416.763.0332
www.kgmaster.com
Also see Page 15

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை

வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!

Das Narayanasamy AMP
Mortgage Specialist
Cell: 416-543-6614
Business: 416-759-1818, Fax: 416-299-0789
E-mail: das.narayanasamy@centumveedu.com
www.centumveedu.com
CENTUM Veedu Mortgages Inc.

Buy & Sell Residential and Commercial

Raj A. Rasaratnam B.Com.
Sales Representative
416-726-8055
வீடு வியாபார நிலையங்கள் வாங்க விற்க
HomeLife/ GTA Realty Inc.
Real Estate Brokerage*
*Independently own and operated
1711 McCowan Rd., Suite #206, Scarborough, ON. M1S 3Y3

வாழ்வு-வியாபாரம்-முதலீடு

HomeLife GTA Realty Inc., Brokerage *
Shiva Sharmah
Sales Representative
416-666-5515
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி

DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc., Brokerage*
1711 McCowan Rd.
Suite #206, Toronto
• INDEPENDENTLY OWNED AND OPERATED

# அடுத்தமுறை அல்லது மீண்டும் வரும் சந்தர்ப்பம்

நான், யாவற்றையும் அடுத்தமுறை மிகவும் திறமையாகச் செய்துமுடிக்கக்கூடிய சக்தி உள்ளவன் எனும் கருத்தை இப்போ மனதார ஏற்றுக்கொள்கிறேன்.

## ஆளுமை (96) வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

மறுமுறை! இந்த அடுத்ததடவை எனும் சந்தர்ப்பம் எமக்கு எத்தகையதோர் ஆசீர்வாதம் என்பதைப் பற்றி சற்று சிந்தியுங்கள் அன்பர்களே! ஒரு பரீட்சையில் கட்டணம் கட்டாமலேயே, தேறிடும்வரை நீ மீண்டும் மீண்டும் தோன்றி, பிரயாசையுடன் முயற்சி செய்திட இந்த 'மறுமுறை', உனக்கு சந்தர்ப்பம் அளிக்கிறது. ஆமாம்! ஒரு தோல்விக்குப் பின், ஒற்றுமையுடன் மீண்டும் முயன்றால் வெற்றி! தவறுகளினால் சின்னாபின்னமாகிவிட்ட உனது ஜீவியத்தினை, இந்த 'மறுமுறை' திரும்பச் சீர்செய்திட துணை புரிகின்றது. இழந்த உனது கௌரவத்தை, உனது பெயரை நீ மீண்டும் நிலைநாட்டிட, புதிதாய் மதிப்பீடு செய்வதால், எந்தச் சந்தர்ப்பமானாலும் சரி, அதில் உனது ஸ்தானத்தை மாற்றி உயர்த்திட, சிந்தனையின் பின் உனது மதிப்பீட்டினையே மாற்றிவிட, இந்த மறுமுறை நல்லதோர் சந்தர்ப்பம் அளிக்கின்றது அல்லவா? ஒரு விடயத்தை திரும்பச் செய்வது பலருக்குப் பிடிக்காது என்றாலும், அதை மீள்பரிசோதனையின் பின் மீண்டும் செய்வது எவ்வளவு சிறந்த ஆசீர்வாதங்களை அளிக்கின்றது தெரியுமா?

கடுங்கோபத்தில் நீ உளறிக்கொட்டிய சுடுசொற்களை மறுதளிப்பதனால், உனது குணத்தையும் ஆளுமையையும் மேம்படுத்திக் கொள்ளலாம். உனது கணக்குவழக்குகளைக் கவனித்து ஒழுங்குபடுத்துவதால் உனது பண இழப்புகளை நிறுத்தி சீரமைக்க முடியும். 'உன்னில் எனக்கு விருப்பமில்லை! நீ எனக்கு வேண்டாம், என உன்னை விலக்கித் தள்ளியதால் ஏற்படும் விரக்தியும் துயரமும் ஒவ்வொருவருக்கும் கட்டாயம் பரிச்சயமாயிருக்கும். ஆனால் இந்த அநுபவம், உண்மையில் நான் யார், என ஒரு சுய அலசல் செய்யத் தூண்டிடும் ஒரு தெய்வீக சந்தர்ப்பம் தான் என்பது புரிகிறதா? வாழ்வின் ஒவ்வொரு சம்பவமும் அடுத்து வரப்போகும் சம்பவங்களிற்கு ஓர் ஒத்திகைதான் என்பதைப் புரிந்து கொண்டால், நடைபெற்றவைக்காக மனம் வருந்தி வீணே விசனப்பட்டுக் கொண்டிருக்கத் தேவையில்லை. உனக்குப் பிடிக்காத நிலையிலிருந்து நீ எப்போதும் விலகிக் கொள்ளலாம். உனக்கு சிறப்பானவற்றைவிட, உன்னைக் குறைப்பவற்றிற்கு நீ உடன்படாதிரு.



உனது மரியாதையையும் கௌரவத்தையும் குறைத்திடும் உனது பழக்கவழக்கங்கள், உறவுகள், சந்தர்ப்ப சூழ்நிலைகளிடமிருந்து நீ நேரத்துடன், விவேகமாய் விலக்கிக் கொள்வது, உனது சக்தியை உனக்கு மீண்டும் தரும். தலைமுடி உதிர்ந்த வழுக்கைத்தலையைச் சீர் செய்ய முடியாது தான். ஆனால் உனது கடுமையைத் தளர்த்தி, முகமலர்ச்சியுடன் நீ வாழாலம். உனது சிந்தனையை மாற்றிவிடு! உனது வாழ்வினைச் சீர்திருத்து! அதற்கு நீ எவ்வாறு செயற்பட வேண்டுமென்று முதல் ஆராய்சி செய்! பின்பு உடனடியாக செய்ய வேண்டியவற்றைச் செய்ய ஆரம்பி! உனக்காக நீ தான் இவற்றைச் செய்ய வேண்டும்!

ஒரு விடயத்தை ஒரு முறைக்கு மேல் செய்வதற்கு இன்றுவரை உனக்கு விரும்பமில்லாமல் இருந்திருக்கலாம். இனிமேல் செய்ய வேண்டியவற்றைச் சரிவரச் செய்து உனது நிலைப்பாட்டினை உறுதியாக்கிக் கொள்.

இழந்த சக்தியை மீளப்பெற்று, எனக்கு நானே வலுவூட்டி, எனது முற்காலத்து தவறுகளின் காய வடுக்களிலிருந்து முற்றிலும் விடுபட இன்றுமுதல் நான் முழுமூச்சாக முயற்சி செய்ய ஆரம்பிக்கிறேன்.

*மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214*



**லலிதா புரூடி**

# கனவு - ஒட்சிசன் - தியானம் - பிரங்க்ஞை - *OSHO*

விழிப்பாக இருக்கச் சொல்வது மட்டும் தியானத்தை உருவாக்காது. இது எந்தவிதமான மாற்றத்தையும் ஏற்படுத்தாது. ஆகவே நான் சில வழிகளை, சந்தா்ப்பங்களை உருவாக்குகின்றேன். இந்த நேரங்களில் நீங்கள் விழிப்பாக இருப்பதைத் தவிர வேறு ஒன்றும் செய்யமுடியாது. இந்த சந்தா்ப்பங்களில் கனவு என்பது சாத்தியமற்றது.

நம்மைச் சூழ அதிகமான காபனீர் ஒட்சைட் ($CO_2$) இருக்கும் பொழுதுதான் கனவு சாத்தியமானது. நாம் கனவு காண்பவராகின்றோம். அதனால் தான் இரவைப் போல் பகல் நேரங்களில் நம்மால் கனவு காண முடிவதில்லை. இரசாயன கூறுகள் மாற்றமடைகின்றன. இரவு நேரங்களில் சூழலில் ஒட்சிசன் ($O_2$) விட அதிகமான $CO_2$ காணப்படுகின்றது. இது தலைகீழாக மாறும் பொழுது அதாவது நமக்குள்ளும் நம்மைச் சுற்றியும் அதிகளவு $O_2$ காணப்படுமாயின் $CO_2$ வெளியேற்றப்படுமாயின் நம்மால் கனவு காணமுடியாது. இதனால் தான் ஆழமான விரைவான (vigorous) மூச்சுவிடுதலை (breathing) நான் முக்கியப்படுத்துகின்றேன்.

இது நம்மிலிருக்கும் இரசாயன சுழலை மாற்றுவதற்கான இரசாயன வழியைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இதனால் மிக அதிகமான $O_2$ நமக்குள்ளும் நம்மைச் சுற்றியும் இருக்கும். அதிகளவு இருக்கும் பொழுது கனவுக்குப் பழியாவதற்கான சாத்தியம் குறைவு. கனவு என்ற ஊடகமின்றி நம் நினைவுகள் (memories) வேலை செய்யாது. காலையில் நாம் புத்துணர்வாய் உணர்வதற்கு காரணம் என்ன? காலையில் சூரியன் உதிக்கும் பொழுது என்ன நடைபெறுகின்றது? $CO_2$ குறைந்து $O_2$ கூடுகின்றது. இதேபோல் நமக்குள்ளும் இரசாயன மாற்றம் அவசியப்படுகின்றது.

நான் பயன்படுத்தும் dynamic தியான முறை அதிகளவு $O_2$ நம் உடலில் உருவாக்குவதற்கான மிகவும் சக்திவாய்ந்த விஞ்ஞான வழிமுறை இது. இதன் முதல் மூன்று செய்முறையின் பின்பு நான்காவது செய்முறையில் தியானத்தீில் பங்குபற்றுகின்றவா் வாழ்க்கைச் சக்தியாக அதிகளவு மாறியிருப்பாா். இது அவரை விழிப்பாக இருக்கச் செய்கின்றது.

அதிகமான சக்தி நம் உடலில் மறைந்து இருக்கின்றது. இதை எழச் செய்து தியானத்தை நோக்கிச் செயற்படுத்த வேண்டும். தியானத்தினூடாக இச் சக்தியை செலுத்தவேண்டும். இதனால் தான் dynamic தியான முறையில் முதல் செய்முறை நம் சக்தியை எழுப்பி இயங்கச் செய்வதற்கான வழிமுறையைத் தந்திருக்கின்றேன். நமக்கு அருகாமையிலும் மிகவும் இலகுவாகவும் பயன்படுத்துமாறு நமக்கு இருப்பது நமது மூச்சு (breathing activity) செயற்பாடு மட்டுமே.

அதிகளவு $O_2$ உள் எடுக்கும் பொழுது தியானத்திற்கு செல்வது இலகுவாகின்றது. அதிக $O_2$ எங்கள் இரத்தத்தில் இருக்குமாயின் இதயத்தில் இருக்குமாயின்

நம் தியான நிலையை இலகுவாக கண்டுபிடிக்கலாம். எவ்வளவு $CO_2$ வெளிவிடுகின்றோமோ அவ்வளவு இலகுவானது தியான நிலையை அடைவது. $O_2$ உடலில் அதிகரிக்கும் பொழுது உடலில் உள்ள அசுத்தங்கள் குறைகின்றன. உடலில் உள்ள அசுத்தங்கள் அகலுமாயின் மனம் செயற்படுவதற்கு கஸ்டப்படும் என்பதை அறிவது சுவாரசியமானது. சுத்தமான காற்றை சுவாசிக்கும் பொழுது மனதில் எண்ணங்கள் வருவதற்கான சந்தா்ப்பங்கள் குறைகின்றன. ஆகவே $O_2$ முதலாவதாக அதிகரிக்கப்பட வேண்டும். அதிகளவு $O_2$ நம்மில் இருக்கவேண்டும். பயம் இல்லை எனில் ஒன்றிரண்டு விடயங்கள் நடைபெறலாம். ஆழமான நீண்ட மூச்சை எடுத்து விடும் பொழுது நம் நித்திரை குறையும். இது ஒன்றும் கவலைப்படுவதற்கான விடயமல்ல. எப்பொழுது நித்திரை ஆழ்ந்ததாக இருக்கின்றதோ அப்பொழுது அதன் நேரம் குறைகின்றது. மேலும் ஆழமான மூச்சை விட ஆரம்பிக்கும் பொழுது மேலும் நித்திரை ஆழமாவது அதிகா-ிக்கின்றது. இதனால் தான் கஸ்டமான வேலை செய்பவா்கள் இரவு நேரங்களில் ஆழ்ந்த நித்திரை கொள்கின்றனா். இவ்வாறான நித்திரையின் பின் காலை எழும் பொழுது மிகவும் புத்துணா்ச்சியாக வும் ஆனந்தமயமாகவும் இருக்கும். இதை தியானத்திற்குப் பயன்படுத்தலாம்.

உண்மையாக என்ன நடைபெறுகின்றது என்றால் மூச்சு அதன் முழுமையான வீச்சுக்கு வரும் பொழுது நமது உடலுக்கும் ஆன்மாவிற்கும் (நமக்கும்) இடையில் ஒரு இடைவெளி உருவாகின்றது. அப்பொழுது நமது நித்திரை (sleep) பகுதிகளும் விழிப்பான (awakened) பகுதிகளும் ஒன்றிலிருந்து ஒன்று விலகுகின்றது. இப்பொழுது நமது விழிப்பான பகுதிகளுக்கு நாம் செல்லலாம். இந்த நிலையில் உடலுக்கு அதிகளவு $O_2$ தேவைப்படாது. உடல் நித்திரைக்குள் போவது நல்லது இப்பொழுது. அதாவது இறந்த உடல் போன்று அசைவற்று இருக்கும். ஆகவே நம் வாழ்க்கைச் சக்தி உடலை நோக்கி இப்பொழுது இயங்காது. புதிதாக ஆன்மாவை நோக்கி நகரும்.

உடலுக்குத்தான் $O_2$ தேவை. ஆன்மாவிற்கு உண்மையாகவே $O_2$ தேவையில்லை. எப்பொழுது நம் வாழ்க்கைச் சக்தி ஆன்மாவை நோக்கி பயணிக்கின்றதோ அப்பொழுது உடலுக்கு குறைந்தளவு $O_2$ வே தேவைப்படுகின்றது. இது உயிருடன் இருப்பதற்கு போதுமானளவு. இதற்கு அதிகமாக தேவைப்படாது. இவ்வாறான நிலையிலையே நாம் தியானத்தினுள் ஆழமாகச் செல்கின்றோம். ஆன்மாவை நோக்கிய பயணம் நடைபெறுகின்றது.

மூச்சு - ஒரு சாவியைப் போல் பயன்படுகின்றது. வீட்டிக்குள் செல்வதற்கு சாவி தேவை. உள்ளே சென்றவுடன் சாவியின் தேவை முடிந்துவிடுகின்றது. இதேபோல் நம் வாழ்க்கை சக்தியை இயங்கச் செய்வதற்கு மூச்சு என்னும் சாவி தேவை. சக்தி விழித்துக் கொண்டபின் மூச்சு தானாகவே குறைகின்றது. ஒரு நிலையில் மூச்சு நிற்கும் பொழுது நாம் நடுநிலைக்கு வந்திருப்போம். இந்த நிலையையே சமாதி எனக் கூறுகின்றோம். இதுவே பிரபஞ்சத்தை அறியும் நிலை.

பிரபஞ்ச நிலையை அனுபவத்தில் அறிய Osho active meditation வழிகாட்டுகின்றது. இதில் பங்குபெற அழையுங்கள் - Meerabharathy
905 294 6707 / 647 505 6746
awareness@rogers.com


விளம்பரம்

VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION

• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...

ந. தயாபரன்

Certified Inspection Specialist

**Expert Building Inspections LTD.**

• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report

24 /7 - Toll Free - **1.866.373.3315 416.727.8336**

# அதீத கற்பனை யதார்த்தத்தை முடக்குமா?

இதிகாச புராண வரலாறுகள் பல, இலக்கியக் கற்பனைச் சுவையேறி தம் இயல்பை இழக்கின்றன.

இலக்கிய இரசனை என்பது கற்பனையில் அதீத அடைமொழிகளை வழங்கி ஆனந்தம் காண்பது என்பதாகவே படைப்பாளிகளின் அன்றைய சிந்தனை இருந்தது. ஏன்? இன்றும் தான்.

புதிய புதிய ஆய்வுகளை வாசித்ததன் பயனாக அவற்றைச் சீர்தூக்கிப்பார்க்கும் போது அந்தக்கருத்துக்களின் உண்மைகள் பல புரியலாயின. மூளை என்பது அப்படி அப்படியே எல்லாவற்றையும் நம்பிவிடும் இயந்திரம் அல்ல. சிந்தனைக்கு இடங்கொடுக்கும்போது தமது கல்வி, அறிவு அவ்வக்கால, தற்கால சூழ்நிலை என்பவற்றைக் கருத்தில் அமைத்துப் புரிந்து கொண்டு எடுக்கும் முடிவில் தான் ஒரு தெளிவு இருக்கும்.

பிரமாண்டமான இந்த அண்டபேரண்டம் கோடிக்கணக்கான வருடங்களைப் பின்னோக்கி நகர்த்திக் கொண்டு வருகிறது. வெப்பத்துக்கு கரைந்தவிடும் பனித்துளி போல் பிறந்து ஒருசில ஆண்டுகள் வாழ்ந்து மறைந்து விடுவதே மனிதவுயிர். மாபெரும் உலகத்தையும் அதன் இறந்தகால நிகழ்கால வருங்காலத்தையும் அறிய இந்த வாழ்நாள் போதுமானதா?

ஏதோ எழுதிவைத்த சில நூல்களை - ஏடுகளை - கர்ண பரம்பரைக் கதைகளைக் கொண்டு அறிவைப் பெறுகிறோம். எழுதி வைத்தவர்களோ தங்கமுலாம் பூசி அழகாகச் செப்பனிட்டுத் தமது சிற்றறிவால் மெருகேற்றித் தருகிறார்கள். புலவர்களின் ரசனையை உண்மை என உருவங்கொடுத்து விடுகிறது உலகம். அத்தோடு தமது அபிப்பிராயங்களுக்கு எதிராக அவற்றைக் காட்டித் தமது எழுத்தின் வலிமையால் அவதூறும் ஏற்படுத்துகிறது. தமது சிற்றறிவுச் சின்னாள் சிலபோது வாழ்க்கையில் தங்கள் கருத்துகளுக்கு சாதகமான அல்லது பாதகமான எண்ணங்களை விதைத்துச் செல்கிறது.

உதாரணமாக, ஏற்கனவே அறிந்திருக்கும் இரண்டொரு சம்பவங்களை எடுத்துக் கொள்வோம். முக்காலமும் உணர்ந்த பகவான் சத்யசாயி பாபாவின் கூற்றிலிருந்து எடுக்கப்பட்ட விடயம் ஒன்று தரப்படுகின்றது.

கிருஷ்ணபகவானின் அவதாரக்கதைகளில் இருந்து பெறப்பட்ட சில விடயங்கள் எப்படி மக்களால் பார்க்கப்பட வைக்கிறது என்பது ஒன்றாகும். கிருஷ்ணர் இடையர் சேரியிலே தலைமைப் பண்புகொண்ட ஒரு குடும்பத்திலே வளர்கிறார். மடியில் வளரும் பருவத்தில் பூதகி எனும் அரக்கியின் பாலை அருந்தி அவளைச் சக்தி இழந்து சாக வைக்கிறார். தவழும் பருவத்தில் உரலோடு கட்டி வைக்கப்பட, மரங்களாக நின்ற இரு அரக்கர்களின் நடுவே உரலை இழுத்துச் சென்று மரங்களை முறியவைக்கிறார்.

நடக்கும் தளிர் நடைப்பருவத்தில் இடையர் குலப்பெண்களின் வீடுகளில் சென்று வெண்ணெய் திருடுகிறார். மாடு மேய்க்கச் செல்கிறார். கோபியர் நீராடும்போது அவர்களின் ஆடைகளை ஒளித்து வைக்கிறார். குழந்தைகளின் குறும்பையும் விளையாட்டுகளை யும் கண்டுமயங்கி அவர்களை இழுத்துப் பிடித்தும், கட்டியணைத்தும் முத்தமிட்டும் தம் ஆனந்தத்தைகாட்டிக் கொள்வது பெரியோர் இயல்பு.

ஒரு பெரிய சங்கீத வித்துவானாக இருந்தாலும் தன் குழந்தை ஒரு பாலர் பாடலைத் தப்புந் தவறுமாகப் பாடி விட்டால் கூட எவ்வளவு பூரித்துப் போகிறார். குழந்தைக் கிருஷ்ணனின் மழலையில் - புல்லாங்குழலிசையில் - தறுகுறும்பில் மயங்காதவர் உண்டோ? அதிலும் தாய்மைப் பண்புகளை கொண்ட கோபியர் கொண்டாடி மகிழ்வதில் என்ன ஆச்சரியம்! கட்டியணைத்து கொஞ்சி மகிழ்தலும் இயல்பன்றோ.

“தீராத விளையாட்டுப் பிள்ளை கண்ணன்
தெருவிலே பெண்களுக்கு ஓயாத தொல்லை”
எனப்பாடிய புதுமைக்கவி பாரதியாருக்கு கற்பனையில் கண்ணன் குழந்தையாக குறும்புகள் செய்வதுதான் தோன்றுகிறது.

குழந்தைக் கண்ணன் வாலிபனான பின் எந்த இடத்திலும் பெண்கள் விடயமாக ஒருதகவலும் காணப்படவில்லை.

பொதுவாக ஆண்கள் பதினைந்து பதினாறு வயதின் பின்தான் இளைஞன் எனும் பெயர் பெறும் வண்ணம் வயதுக்கு வருகிறார்கள். காதல், விவாகம் என்பன அதன்பின் தான் முகிழ்ப்பதாக காண்கின்றோம்.

கண்ணனாக பிருந்தாவனத்தில் தறுகுறும்புப் பையனாக கோபியருடன் விளையாடித் திரிந்த காலம் ஐந்து வயதும் இரண்டு மாதமுமாகக் கணிக்கப்பட்டிருக்கிறது. அவரது தெய்வீகத் தன்மை அடிக்கடி வெளிப்படுத்தப்பட்டாலும் மறுசமயங்களில் சாதாரண சிறுவனாகவே கோபியரின் செல்லப்பிள்ளையாகவே வாழ்ந்தார்.

கிருஷ்ணரும் பலராமரும் குருசிஷ்யமுறையில் கல்விகற்க சாந்தீபமுனிவரிடம் சென்றபோது வயது 12. ஆனால் பாரத யுத்தம் எல்லாம் முடிந்த பின்னாளிலேயே தான் வளர்ந்த பிருந்தாவனத்தை அது அழிந்து செல்வாக்கிழந்த காலத்திலேயே திரும்பி வந்து பார்வையிடுகிறார்.

அவர்கள் எல்லாம் மறைந்து கிருஷ்ணர் தெய்வமாகப் போற்றப்பட்ட காலத்தே வைணவ சமயத்தைச் சேர்ந்த ஆழ்வார்களும் ஆச்சார்யார்களும் பாடிய பாசுரங்களில் அந்தப் பால்ய லீலைகளை வாலிபனுக்கு தம்மை கோபியராகக் கற்பித்து நாயக நாயகி பாவத்தில் பாடியும் வைத்தார்கள். அதற்கு விளக்கங்கள் கொடுக்கு வந்த ஆச்சார்யார்கள் இடைச்சேரியிலே கோபியருடன் ஆடியது வாலிபக் காதல் எனும் பொருள்பட எழுதி வைத்தார்கள். அவற்றைப் படித்தவரோ பேரின்பப் பெருங்காதலாகக் கொள்ளாது சிற்றின்பம் சார்த்தி பொருள் கண்டார்கள்.

அச்சிறுவனை இளைஞனாகக் கற்பனைசெய்து கோபியருடன் ஜலக்கிரீடை விளையாடினார் என எழுதிவிட்டார்கள். [ஆற்றுப்பெருக்கு நாட்களில் மன்னரும் மற்றையோரும் தத்தம் காதலியுடனோ அல்லது அவர்தம் மனைவியுடனோ நீருள் விளையாடி மகிழ்தலை ஜலக்கிரீடை அல்லது ராஜக்கிரீடை என்று சொல்வார்கள்.] விரசக்கண்கொண்டு பார்த்த கவிஞர்களுக்கு அதுகூடக் காதலாகத்தான் தெரிகிறது. அதனை வாசித்த நாஸ்திகரோ கிருஷ்ணரைக் காமுகனாகவே நையாண்டி செய்கிறார்கள்.

கிருஷ்ணரைப் பொறுத்தவரை றுக்மணி, சத்தியபாமா இருவருமே காதலரோ, மனைவியரோ ஆவர். வேறு எவருமல்ல.

ஆன்மீக விளக்கங்கள் குறைந்த இக்காலத்தே கடவுள் எதிர்ப்புப் பிரசாரத்துக்கு இப்பொருள் கைகொடுத்துதவும் வண்ணம் திரிபு படுத்தப்பட்டு உபயோகமாகிறது.

இதேபோல் பல விடயங்கள் காலமாற்றத்தில் சிதைந்து பொருள் கொள்ளப்பட்டு வருகின்றன. தசரதனின் மனைவிமார் 6000 என்பதும் ஒன்று ஒருநாட்டின் மக்கள் அனைவருமே தமது அரசன் மீது தேவதா விசுவாசம் வைத்திருப்பார். உயிரையும் தியாகம் செய்யத் தயாராய் இருப்பர். அரசனுக்கு ஒன்றென்றால் துயரமிகுதியால் வாழப்பிடிக்காது தம்மை மாய்த்துக்கொள்வர். பழைய நூல்களில் 60,000 பெண்கள் எனத் தான் காணப்படுகிறதாம். மிகப்பிற்பட்ட நூலாகிய கம்பராமாயாணத்தில் மனைவியர் என எழுதப்பட்டிருக்கலாம். மூலப்பிரதி இரண்டுமே கைக்கெட்டவில்லை.

இன்னும் இராவணனின் பத்துத்தலை என்பதும் கீரிமுகமும் குதிரைமுகமும் ஒருவகை நோயென்று புரியாது அந்தந்த மிருகங்களின் முகமெனக் கொண்டும் காலஓட்டத்தில் புரிந்தியல்பு ஆற்றல் மாறியோ திரிபடைந்தோ வருவது தவிர்க்கமுடியாதது ஆகும். உண்மை காணமுடியுமாயின் உள்ளத்தில் தெளிவு உண்டாகும்.

தாங்கள் வாழுங்காலந்தான் உண்மையானது, தாம் அறிவுகூடிய உன்னதமானவர்கள் என்று நினைக்கும் தற்பெருமைக் குறுகிய மூளைகள் ஊரைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கக் கங்கணங்கட்டித் பத்திரிகைகள் மூலம் தம் அறியாமையை வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்களே. அத்தகைய குறுக்குவழிச் சிந்தனைகளுக்கு (சிந்தனை என்று சொல்லுவதும் தவறு. ஈயடிச்சான் கொப்பி) அனுதாபம் தான் தெரிவிக்கலாம்.

“எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”



**- காங்கயி -**


தருமஸ்தாபனங்களுக்கு நன்கொடை வழங்கல்

**நன்கொடையாளர்களுக்குத் தகவல்கள்.**

கனேடிய வருவாய் திணைக்களம் (CRA) **தரும ஸ்தாபனங்களுக்கு நன்கொடை வழங்கல் : நன்கொடையாளர்களுக்குத் தகவல்கள்** என்ற பெயரில் ஓர் இணையதளத்தை ஆரம்பித்துள்ளது. இவ் இணையத்தளத்தில் பின்வரும் தகவல்களைப் பெறலாம்:

- பதிவு செய்யப்பட்ட தரும ஸ்தாபனங்களை தேடிக் கண்டுபிடித்தல்.
- தரும ஸ்தாபனங்களுக்குரிய செயற்பாட்டு விதிமுறைகள்.
- நன்கொடை பற்றுச்சீட்டுக்கள் வரிசேமிப்புக்கள் பற்றியது
- ஏமாற்று நிதிசேகரிப்பு நடவடிக்கைகளில் இருந்து உங்களைப் பாதுகாத்தல்.

குறித்த ஒரு தருமஸ்தாபனம் வரி தள்ளுபடி பெறத்தக்க பற்றுச்சீட்டுக்களை வழங்கும் அதிகாரமுடையதா என்பதை அறியலாம். அத்துடன் பதிவு செய்யப்பட்ட ஸ்தாபனங்களின் தனிப்பட்ட நிதிநிலைமைகள் பற்றியும் அறியலாம்.

தருமஸ்தாபனங்களுக்கு நன்கொடை வழங்கும் போது அந்த தருமஸ்தாபனங்கள் பற்றி தகவல்கள் தெரிந்திருங்கள். பார்வையிடுங்கள் **cra.gc.ca/charities.**

கனேடிய வருவாய் திணைக்களம் வருமான வரி சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தரும ஸ்தாபனங்களின் செயற்பாடுகளை நடைமுறைப் படுத்துகின்றது. இச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட தருமஸ்தாபனங்களுக்கு நன்கொடை வழங்குவதன் மூலம் செலுத்த வேண்டிய வருமான வரி நிலுவையிலிருந்து தள்ளுபடி பெறலாம்.

Canada Revenue Agency | Agence du revenu du Canada



APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL




# விடுதலையின் பாதையில் பெண்கள் - சத்குரு

பல நூற்றாண்டு பழமை விலங்குகளை சத்குரு உடைத்தெறிகிறார்.

ஆண்களை விடவும் பெண்கள் உடல் பலவீனமானவர்கள் என்பதால் பெண்களை உளவியல் ரீதியாகவும் வலிமை யிழந்தவர்களாக்கி ஆன்மீகத்திலும் அவர்களை பலவீனப்படுத்தி பொருளாதாரத்திலும் ஒன்றும் இல்லாமல் ஆக்க என்னவெல்லாம் செய்ய வேண்டுமோ அத்தனையும் செய்தார்கள். இந்த நிலை ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது.

எல்லாமே ஆண்களைவிடப் பெண்கள் உடல் பலவீனமானவர்கள் என்கிற ஒரே காரணத்தால்தான். வெறெந்த விதத்திலும் ஆண்கள் பெண்களைவிட மேம்பட்டவர்கள் என்று சொல்லிவிட முடியாது. கொஞ்சம் கூடுதலான வலிமையிருக்கிறது. அவ்வளவுதான்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இது தொடர்ந்து கொண்டேயிருக்கிறது. இது மிகவும் நீளமானதொரு காலம் என்றே கருதுகிறேன். இது பற்றி கவனம் கொண்டு மக்கள் எதையாவது செய்ய வேண்டும். பெண்களை மதிக்க கற்றுக்கொள்ளும் வரை ஒவ்வொரு ஆணும் பெண்களை மதிக்கக் கற்றுக்கொள்ளும்வரை அவன் தன்னைத்தானே உணர வாய்ப்பேயில்லை. ஏனெனில் அவனின் பாதியே பெண்மைதான்.

இந்து ஆன்மீக உலகில் தன்னை உணருகின்ற விழிப்பு நிலையின் உச்சத்தைத் தொடுதலில் ஆண்களும் பெண்களும் பெரும்பங்கு வகித்திருக்கிறார்கள். உள்நிலையைப் பொறுத்தவரையில் ஆணிற்கு இணையான தன்மை பெண்ணிற்கும் உண்டு என்பது ஐயத்திற்கு அப்பாற்பட்ட நிலையில் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலேயிருக்கிற தோலைத்தான் ஆண் என்றும் பெண் என்றும் பிரிக்கிறோமே தவிர உள்ளே இருக்கிற தன்மை ஒன்றுதான். ஆண் தோலா, பெண் தோலா, என்பது தான் பேதம். உங்கள் ஆன்மீக சக்தியை நிர்ணயிக்கக் கூடியவை இந்தத் தோல்கள் அல்ல. வேண்டுமானால் உடல்கூற்று அளவில் சில பின்னடைவுகள் பெண்களுக்கு இருக்கலாம். ஆனால் உளவியல்ரீதியில் அவர்கள் இன்னும் கூடுதல் வலிமை பெற்றவர்கள். வேதகாலங்களிலிருந்தே பெரிய முனிவர்களாக பெண்கள் திகழ்ந்திருக்கிறார்கள். வழிபாட்டு முறையின் தொடக்கமே பரம்பொருளை ஒரு அன்னையாக வணங்குவதில்தான் தொடங்கியது. விலையில்லாத இறைத்தன்மையை அன்னையாகத்தான் பார்த்தார்கள். அன்று முதல் இன்றுவரை கூட அது தொடர்கிறது. இன்றுகூட பெண்தெய்வ வழிபாடு என்பது ஆண் தெய்வ வழிபாட்டைவிட அதிகம் இருக்கிறது. அறியாமையில் இருக்கிற ஒரு மனிதன்கூட அனைத்துக் கடவுள்களும் தன்னைக் கைவிட்டு விட்டதாகக் கருதினால் விரைவான நன்மைகளைப் பெறுவதற்கு அம்மன் கோயிலுக்குத் தான் செல்கிறான்.

வேதகாலங்களில் அந்தணர்கள் அணிகிற பூநூலைப் பெண்களும் அணிந்திருந்தார் கள். பூநூல் அணிகிற தகுதி அவர்களுக்கு இருந்தது. ஏனென்றால் பூநூல் இல்லாமல் வேதங்களையோ இதிகாசங்களையோ படிக்கக கூடாது என்கிற ஒரு விதிமுறை அன்றைக்கு இருந்தது. ஆன்மீகம் ஆண்களுக்கு மட்டும் உரியதல்ல பெண்களுக்கும்கூட என்பதால் பூநூல் அணிவிக்கப்பட்டிருந்தது. மைத்ரெயி போன்ற பெண் முனிவர்கள் நிறைய பேர் அன்றிருந்தார்கள்.

ஜனக மகாராஜாவின் அரண்மனை யில் ஒருமுறை ஆன்மீக விவாதம் நடந்ததாகச் சொல்லப்படுகிறது. அதில் பங்கேற்க எல்லா முனிவர்களும் ஞானிகளும் சாதுக்களும் கூடியிருந்தார்கள். எது உண்மை எது பொய் என்று கண்டறிவதற்கான போட்டி என்றுகூட அதைச் சொல்லலாம். ஜனக மகாராஜா தன்னை உணர்ந்த ஒருவர். தன்னுள் இருக்கும் உண்மையை உணர்ந்த ஒரு அரசர். எனவே இப்படியொரு விவாதத்தை ஏற்படுத்தி நாட்டில் ஆன்மீகப் பாதையில் இருக்கிற ஒவ்வொரு மனிதரும் பங்கேற்கும் விதமாக அமைத்திருந்தார். விவாதம் தொடரத் தொடர சூட்சுமநிலையில் அது நடைபெறத் தொடங்கியது. தொடக்கத்தில் அங்கே குழுமியிருந்த அத்தனை பேருமே ஆன்மீக விவாதத்தில் பங்கேற்றார்கள். ஆனால் நேரம் போகப்போக பலர் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அவர்களால் உணர முடியவில்லை. அந்த அளவுக்கு விவாதங்கள் சூட்சுமமாகப் போய்க் கொண்டிருந்தன. இரண்டே இரண்டு பேர்தான் தொடர்ந்து விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ஒருவர் யாக்ஙவல்கியர். இன்னொருவர் மைத்ரெயி.

இந்த இருவருக்கும் இடையிலான விவாதம் நாட்கணக்கில் தொடர்ந்து நடைபெற்றது. உணவு இல்லாமல் உறக்கம் இல்லாமல் விவாதம் நடந்துகொண்டேயிருந்தது. எல்லோரும் உட்கார்ந்து அதைப் பார்த்துக் கொண்டிருந்தார்களே தவிர எதைப் பற்றிப் பேசுகிறார்கள் என்பதுகூடத் தெரியாத அளவுக்கு சூட்சுமநிலையிலே விவாதங்கள் போய்க் கொண்டிருந்தன. இறுதியில் மைத்ரெயி கேட்ட ஒரு கேள்விக்கு யாக்ஙவல்கியரால் பதில் சொல்ல முடியவில்லை. ஆன்மீகப் பாதையில் செல்வதற்காக அரசையே துறந்துவிட்டு வந்த அந்த மனிதர் கூர்மையான மதிக்கு மிகவும் புகழ் பெற்றிருந்த அவர் கேள்விகளுக்கு பதில் சொல்லமுடியாத நிலையிலிருந்தார். கோபமும் பதட்டமும் அடைந்தார். மைத்ரெயிடம் சொன்னார் ‘இன்னும் ஒரு கேள்வி கேட்டால் நீ துண்டு துண்டாக வெடித்துவிடுவாய்’ என்று. ஜனக மகாராஜா தலையிட்டார். யாக்ஙவல்கியரிடம் சொன்னார். ‘உங்களுக்கு எல்லாம் தெரிந்திருப்பது போல ஒரு தோற்றம் இருந்தாலும் வாழ்க்கை அனுபவத்துக்குள் அவையெல்லாம் வராததால் கேள்விகளுக்கு பதில் சொல்ல முடியவில்லை’ என்றார். குழுமியிருந்த அத்தனைபேர் மத்தியிலேயும் மைத்ரெயிக்கு அவர் உரிய மரியாதைகள் செய்கிறார் என்று பார்க்கிறோம்.


*ஈஷா யோக மையம் - வெள்ளியங்கிரி மலைச்சாரல், கோயம்புத்தூர்*

*E-mail: yogacenter@ishafoundation.org*

*website: www.ishafoundation.org or www.ishayoga.org*

**சத்குருவால் பயிற்சியளிக்கப்பட்ட ஆசிரியையால் எதிர்வரும் April 25, 07 தொடக்கம் May 01, 07 வரை யோகா வகுப்புக்கள் நடத்தப்படும்.**

**ரொறொன்ரோவில் தொடர்புகளுக்கு: 416.699.0951**


யாக்ஙவல்கியர் தன் குறைகளை உணர்ந்து மைத்ரெயியின் கால்களில் விழுந்து தன்னையும் ஒரு சீடராக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறார். மைத்ரெயி அவரைத் தன் கணவராக ஏற்கிறாள். மைத்ரெயி அவரிடம் சொல்கிறார் ‘நீங்கள் என் சீடராக இருக்கவேண்டாம் கணவராக இருங்கள் என்று. ஏனென்றால் தன் ஆற்றலுக்கு ஓரளவு இணையாக வருகிற எந்த மனிதரையும் அவள் இதுவரை சந்தித்ததில்லை. அவள் உணர்ந்ததை அவர் உணராவிட்டாலும் கூட ஓரளவுக்காவது இணையாக வருபவர் யாக்ஙவல்கியர் என்பதால் அவரைக் கணவராகக் கொள்வது என்று மைத்ரெயி முடிவெடுக்கிறாள். பல ஆண்டுகள் குடும்பம் நடத்துகிறாள். வேதகாலங்களில் ஆண்களுக்கு இருந்த அனைத்து ஆத்ம சாதனைகளும் பெண்களுக்கும் இருந்தன. ஒரு குறிப்பிட்ட வயதிற்குப் பிறகு யாக்ஙவல்கியர் மைத்ரெயிடம் வந்து இந்த உலக வாழ்க்கை போதும் என்று கருதுகிறேன். என்னிடம் இருப்பதெல்லாம் உன்னிடம் கொடுத்துவிட்டு நான் கானகங்களுக்குப் போய் என்னை நானே உணரமுற்படுகிறேன் என்று சொல்கிறார்.

உடனே மைத்ரெயி கேட்கிறார் ‘இதுபோன்ற சொற்ப விடயங்கள் பின்னால் செல்வேன். என்று எப்படி நினைத்தீர்கள். உண்மையான பொக்கிசத்தைத் தேட நீங்கள் போகிறபோது இந்த சின்னச் சின்னப் பொருள்களைப் பெரிதென்று எண்ணி நான் இருந்துவிடுவேனா,’ என்று கேட்கிறார். பிறகு இருவருமே கானகத்துக்குப் போய் ஞானமடைந்த நிலையிலே வாழ்கிறார்கள் என்று பார்க்கிறோம்.

இதுபோல நிறைய கதைகள் உண்டு. இது நமக்கு உணர்த்துவது என்னவென்றால் வேதகாலங்களில் ஆன்மீக வாழ்க்கையைப் பொறுத்தவரை பெண்கள் சரிசமமாகக் கருதப்பட்டார்கள் என்பதுதான். இவை மிகவும் சீர்பட்ட சமுதாயங்களாகத் திகழ்ந்தன. சமூகம் சீராக இருந்தால் ஒரு பெண்தான் ஆதிக்கம் செலுத்துவாள். ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்றுகூட அவசியமில்லை. எல்லாத் துறைகளிலும் சரிசமமாக அவள் திகழ்வாள். சமூகத்தில் சிக்கல்கள் ஏற்படுகிறபோதுதான் சமூக வாழ்க்கை சீர்குலைக்கப்பட்டு இடப்பெயர்ச்சி நிகழ்ந்து ஆணின் கை ஓங்குகிறது. அத்தகைய சூழ்நிலைகளில் ஒரு பெண் பெரிதும் ஆணையே சார்ந்து வாழ்கிறாள். வாழ்க்கை கடுமையாகும் போது ஆண் ஆளுமை செலுத்துவதும் வாழ்க்கை மிகவும் சூட்சுமநிலையிலே இயங்குகிறபோது பெண் ஆளுமை செலுத்துவதும் இயல்பு. அந்த நேரங்களில் ஒரு பெண்ணை சார்ந்துதான் ஒரு சமூகம் இருக்கும். ஒருவேளை இதனால்தான் ஆண்கள் சமூகத்தில் எப்போதும் குழப்பங்களை மேலும் மேலும் உருவாக்கிக் கொண்டு அதன்மூலம் தங்களுடைய ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொள்கிறார்களோ என்னவோ, கி.மு. 3000 த்திலிருந்தே வரலாறு நமக்குச் சொல்வது என்னவென்றால் ஆணும் பெண்ணும் சரிநிகராக இருந்து வந்திருக்கிறார்கள் என்பதுதான். அதற்குப் பிறகு ஆசியநாடுகளில் பல்வேறு பகுதிகளான மங்கொலியா, மத்தியசீனா, இந்தோசீனா போன்ற இடங்களிலிருந்து காட்டுமிராண்டித்தனமான படையெடுப்புகள் நிகழ்ந்தபோதுதான் கொள்ளையடித்து உண்டு வாழும் ஒரு வாழ்க்கை வந்தபோதுதான் பெண் மெல்ல மெல்ல தன் சுதந்திரத்தை இழக்கலானாள். எது கிடைத்தாலும் அள்ளிக்கொண்டு போகிறவர்கள் வந்தவுடன் ஆண்கள் பாதுகாப்புப் பணிகளில் நாட்டம் செலுத்தத் தொடங்கினார்கள். எனவே செயல்முறைகள் ஒருதலைப்பட்சமாகி சாத்திரங்களும் கோத்திரங்களும் கொண்டுள்ள விதிமுறைகள் மாற்றி ஸ்மிருதிகளாக எழுதப்பட்டன. வேதங்கள் தான் ஸ்மிருதிகள். அவை வாழ்வின் அடிப்படை உண்மைகளைப் பற்றி பேசுகின்றனவே தவிர வாழ்க்கை குறித்த எந்த நிர்ணயமும் அவை வகுப்பதில்லை. எப்படி வாழ்வது என அவை சொல்வதில்லை. பிறகு ஸ்மிருதிகள் எழுதினார்கள். 50 லிருந்து 60 சதவீதம் வரை ஸ்மிருதிகள் ஒரு பெண்ணின் வாழ்க்கை எப்படியிருக்க வேண்டும் என்பதை நிர்ணயிப்பதாகவே அமைந்தது. ஒருவேளை அதற்கான கட்டாயம் அப்போது இருந்தது என்று சொல்லலாம். வெளிச்சூழ்நிலை காரணமாக



**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

பெண் மீது சில தடைகள் வகுக்கப்பட வேண்டியிருந்திருக்கலாம். ஆனால் அவை நிரந்தரமான சட்டங்களாக மாறியது துரதிஸ்டவசமானது. ஸ்மிருதிகளைப் பொறுத்தவரை பெண்ணுக்கு எதிராக செய்த முதல் மாற்றம் என்பது பெண்கள் ஆண்களைப் போல பூநூல் அணிய முடியாது என்று நிர்ணயித்ததுதான். அது ஒரேநேரத்தில் எழுதப்பட்டிருக்க முடியாது. படிப்படியாகத்தான் நிகழ்ந்திருக்கக்கூடும். மெல்ல அது மேலும் வளர்ந்து ஒரு பெண் முக்தியடைய ஒரே வழி அல்லது தன்னை உணர்வதற்கான ஒரேவழி தன் கணவனுக்குப் பணிவிடை செய்வதன் மூலமாகத்தான் வேறு வழியே இல்லை என்று முடிவு செய்தார்கள்.

வேதகாலங்களில் ஒரு பெண் தன்னுடைய குடும்ப வாழ்வை எப்போது வேண்டுமானாலும் முடித்துக் கொள்ளலாம். ஆணுக்கு இருந்த அதே சுதந்திரம் பெண்ணுக்கும் இருந்தது. சமூகத்தில் எந்த ஒரு எதிர்விளைவையும் ஏற்படுத்தாமல் இத்தகைய முடிவுகளை பெண்கள் எடுத்ததற்கான பல சான்றுகள் உள்ளன. அது சமூகத்தால் ஏற்கப்பட்டது. ஒரு பெண் தான் விரும்பிய கணவரை தேர்ந்தெடுத்துக் கொண்டாள். அந்த எல்லை தாண்டி அவள் வளர்ந்துவிட்டதாகக் கருதினால் குடும்பம் என்கிற அமைப்பைவிட்டு ஒரு ஆண் வெளிவருவதைப் போலவே பெண்ணும் வெளிவந்து கொண்டிருந்தாள். ஆண் ஒருவனுக்கு திருமணம் ஆகிறது. பத்து, இருபது ஆண்டுகள் குடும்பம் நடத்துகிறான். பிறகு ஆன்மீக நாட்டம் வருகிறது. குடும்பத்தைத் துறந்துவிட்டுப் போகிறான். அதே உரிமை ஒரு பெண்ணுக்கும் இருந்தது. ஆன்மீகப் பாதையில் செல்ல வேண்டும் என்கிற நாட்டம் அவளுக்கு வந்தபோதெல்லாம் குடும்பத்தைத் துறந்துவிட்டு அவள் சென்றிருக்கிறாள். இது வேதகாலத்தில் முழு மனதோடு ஏற்கப்பட்டிருக்கிறது.

காலப்போக்கில் யாரோ துறவு மேற்கொள்ளுவது ஆணுக்குத்தான் சாத்தியம் என்று வரையறுத்து விட்டார்கள். இது பற்றி யாருமே கேள்வி எழுப்புவது இல்லை. ஓர் ஆண் ஒரு பெண்ணைத் துறந்துவிட்டு ஆன்மீகப் பாதையில் போகலாம். தன்னிடம் இருப்பது எதையும் துறப்பது எல்லோருக்கும் உள்ள உரிமைதானே. ஓர் ஆண் ஒரு பெண்ணைத் துறந்துவிட்டால்


தொடர்ச்சி 08ஆம் பக்கம்



**ஏக்கர் நிலம் வருமானத்துடன்**

**வீடும் வியாபாரமும்**

Metal Recycling
Auto Body Shop
Yunk Yard 2 Acres land with
House and Basesemt

Auto Body shop
House with Basement
Yunk Yard
10 acres

பரந்த நிலப்பரப்பு பங்களோ இரண்டு மூன்று குடும்பங்கட்கு வேலைவாய்ப்பு அழையுங்கள் - Sam Sitham (Sales Rep)

**416.230.7820 / 905.696.7310**

**HomeLife GTA Realty Inc. - 416.321.6969 /905.712.2666**

KENNEDY / FINCH பகுதியில் கோவில், வீதி நடைதூரத்தில்
Sep. entrance Basement வருமானத்துடன் அழகான இல்லம்

# வீதி விபத்துக்களில் நட்ட ஈடு தீர்மானம்

இங்கு இரு வாகனங்களுக்கு இடையில் நடந்த ஒரு சிறு விபத்து. விபத்து நடந்த இப்பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி உருவப்படத்தினை சற்று உற்றுப்பாருங்கள்.

எதிர் எதிராக வாகனம் செலுத்தும் தனித்தனி பாதை ஒழுங்கைகள் உடைக்கப்பட்ட மஞ்சள் கோட்டினால் பிரிக்கப்படுகின்றது. இந்த உடைக்கப்பட்ட மஞ்சள் கோடு (Broken Yellow line) பிரித்து இருப்பது என்பது ஒன்றன் பின்பு ஒன்றாக வாகனம் செலுத்தி கொண்டிருப்பவர்களுக்கு ஒரு சிறு அனுகூலம்.

முன்னால் போகும் வாகனம் மெதுவாக ஊர்ந்து செல்லுமானால், எதிர் பக்க பாதையில் இருந்து வாகனம் ஒன்றும் வராது பாதுகாப்பாக இருக்குமானால் வாகனம் செலுத்துபவர்கள் எதிர்பக்க ஒழுங்கையினுள் மாறி எடுத்து முந்தியடித்து கொண்டு ஓட்டலாம். இப்படியான ஒரு வீதியிலேயே இவ்விபத்து நடந்தது என கருத்தில் எடுத்து கொள்வோம்.


சிவ. பஞ்சலிங்கம் B. Com,

(Licensed Insurance Broker)

காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


**அதாவது** (A) **என்ற ஒரு வாகனம் இத்தகைய ஒரு வீதியில் வந்து இடது பக்கம் உள்ள தனியார் பாதை** (Private road) **அல்லது தனியார் வீட்டு முற்றம்** (Drive way) **ஒன்றினுள் திருப்பும் போது இவ்** (A) **என்பவரின் பின்னால் நேராக போவதற்கு வந்து கொண்டிருந்த** (B) **என்பவர் ஒரு அவசர புத்தியில் இவ் உடைக்கப்பட்ட எல்லை கோட்டில் எதிர்பக்க பாதையில் மாறிமுந்தி ஓடும் சலுகையினை** (Right of over-taking over broken lines lanes) **உபயோகிக்கும் நோக்கில் முந்தியடித்து ஓட முயற்சிக்கும் நேரம், இடது பக்கம் திருப்பிக் கொண்டிருந்த** (A) **என்பவருடன் எதிர்பக்க பாதையினுள் மோதல் நடந்து விட்டது.**

இதுவே விபத்து நடந்த விதம் ஆகும். இவ் இரு வாகனங்களுக்கும் இடையில் நடந்த இவ்விபத்தில் சரி? பிழை? என்பது எந்த பக்கம்? மாகாண அரசின் வாகன காப்புறுதி சட்டத்தில் உள்ள பிரிவு (Accident Fault Determination Rules & Regulation) ஆங்கிலத்தில் இங்கு குறிப்பிடப்பட்ட வரை படத்தின் கீழ் பின்வருமாறு செய்கின்றது.

If the incident occurs when automobile (A) is turning left at a private road or drive-way and automobile (B) is overtaking automobile (A) to pass it, the driver of each automobile is 50% percent "AT FAULT" for the incident.

அதாவது இந்த விபத்தில் இரு வாகன சாரதிகளும் சட்டப்படி சமமான தப்புக்கு உரியவர்கள் ஆகின்றனர்.

(A) என்பவர் இடது பக்கம் திருப்புகின்றார் என்பதனை அவதானிக்காமல் (B) என்பவர் பின்னால் நின்று பொறுமையாக தொடர வேண்டியவர் அவசரப்பட்டதில் ஒரு தப்பு.

(A) என்பவர் இடது பக்கம் திருப்பும் போது கட்புலனாகாத பகுதி (Blind Spot Area) என குறிப்பிடப்படும் இடது பக்கம் தலையினை திருப்பி தோளுக்கு மேலால் வாகனம் ஓட்ட கற்றுக்கொள்ளும் போது போதனாசிரியர் கற்று கொடுத்த மாதிரி பார்க்க தவறிய தப்பு! முடிவு!

(A) என்பவர் 50% தப்பு! (B) என்பவர் 50% தப்பு!




## தொடர் (5)

வாகனங்களுக்கு ஏற்பட்ட இழப்பில் திருத்த செலவு எவ்வளவு என மதிப்பீடு செய்யப்படுகின்றதோ அத்தொகையில் அரைவாசி தொகையினையே வாகன காப்புறுதி ஒப்பந்தத்தின் "செலவில்லாத காப்புறுதி நட்ட வழங்கல் பிரிவு" (No Cost Insurance Coverage or No fault Direct Property Compensation Coverage Section) என்னும் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ளலாம். இதிலும் சில ஒப்பந்தங்களில் "Deductible" என ஆங்கிலத்தில் குறிப்பிடப்படும் ஒரு தொகை குறிப்பிடப்பட்டு இருந்தால் அந்த தொகையினையும் கழித்து கொண்டே வழங்குவார்கள். மிகுதி 50% வீத வாகன திருத்த செலவினையும் மேலதிக பணம் கொடுத்து பெற்று வைத்திருக்கும் "தமது தப்பினால் தமது வாகனத்திற்கு ஏற்படும் நிவாரண பிரிவு" (Collision Coverage) என்னும் பிரிவில் இருந்த நட்டஈடு பெறவேண்டும். அப்பிரிவு தமது வாகன காப்புறுதி ஒப்பந்த பிரிவில் இல்லாது அதாவது அடிப்படை காப்புறுதி என்பது மட்டும் (One way basic coverage) வைத்திருந்தால் இவ்இடத்தில் வாகனத்திற்கு ஏற்பட்ட மிகுதி அரைவாசி பணத்தினை விபத்தில் சிக்கிய இவ் இருவரும் தமது சொந்த பணத்தில் இருந்தே செலவழித்து கொள்ளல் வேண்டும்.

ஆனால் இந்த நிலைமையிலும் காப்புறுதி நிறுவனத்தின் நட்ட ஈடு கோரிக்கையினை முன் எடுத்து 50% வீதம் செலவில்லாத இழப்பு நிவாரணத்தினை கோரும் போது இது அவரவரின் வாகன காப்புறுதிகளின் பதிவுகளில் போவது தவிர்க்க முடியாத ஒன்று ஆகும். விபத்தில் 50% தப்பு என்ற ஒரு பதிவு புதுப்பிக்கும் போது காப்புறுதியின் விலையினை உயர்த்தும் நிலைமையில் செல்வதும் தவிர்க்க முடியாத ஒன்றாக அமைந்து விடும்.

சரி இங்கு வாகனங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளுக்கு நட்ட ஈடு பெறுவது தவிர, இவ்விபத்தில் உடல் காயங்களுக்கு உட்பட்டிருந்தால் எவ்வகையில் நட்டஈடுகளை பெறலாம்? அது ஒரு கேள்வி.

இவ் உடல் காயங்களுக்கான நட்டஈடுகளை பெறுவது என்பது இருவழிகளில் உள்ளது.

1. தத்தமது காப்புறுதி கம்பனிகளிடம் தொடர்பு கொண்டு விண்ணப்ப படிவங்களை பெற்று மருத்துவ அத்தாட்சி பத்திரங்களுடன் நிரூபித்து "Statutory Accident Benefits" என குறிப்பிடப்படும் இக்காப்புறுதி ஒப்பந்த பிரிவினுள் இருந்து அவ் ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்ட வரையறை வரை பெற்று கொள்ளுதல்.

2. முதல் அத்தியாயத்தில் தமது கம்பனியில் பெற்று கொண்டதற்கு மேலாக, அடுத்த இரண்டாம் கட்டமாக விபத்தில் உடல் காயமடைந்தவரின் நிலைமை என்பது ஒரு எல்லையினை தாண்டி வாழ்வில் சராசரியாக இயங்கமுடியாத அளவுக்கு மோசமாக பாதிக்கப்பட்டு (Abnormality of a psychological, physiological or anatomal structure of function) நடந்த விபத்தில் இங்கு குறிப்பிடப்பட்ட நபரில் மேலே குறிப்பிடப்பட்ட மாதிரியான சட்ட ஒழுங்குகளின் பிரகாரம், ஒருவிதமான தப்பும் இல்லையென்றால் விபத்தில் தப்புக்குரிய சாரதியின் காப்புறுதி கம்பனி மீது சட்ட ரீதியாக வழக்கினை தொடர்ந்து பெருந்தொகை நட்டஈட்டினை பெற்று கொள்ளும் உரிமை.

சரி! வாகன விபத்தில் உடல் காயம் அடைந்தவர் தமது கம்பனியில் இருந்து எந்த வகைகளில் நட்டஈடுகளை முதலாம் அம்சத்தில் குறிப்பிடப்பட்ட மாதிரியில் பெறலாம்.

1. வருமான இழப்பீட்டு சலுகை! (Income replacement benefit)
விபத்தில் காயமடைந்தவர் ஏற்கனவே தமது தொழில் வருமான-மாக எவ்வளவு தொகையாக பெற்று வந்தாரோ அதில் 80% வீதத்தினை பெறலாம். அதிலும் கிழமைக்கு $400 டொலர் மட்டுமே வழங்கப்படும்.
(இதிலும் ஏராளமான நிபந்தனைகள், ஒழுங்குவிதிகள் உண்டு.)

2. வருமானம் இல்லாதவருக்கு வழங்கும் சலுகை (Non earner benefit)

விபத்து நடந்த போது அதற்கு முன்பு வருமானம் இல்லாது இருந்து மேலே முதலாவது அம்சத்தில் குறிப்பிடப்பட்ட "வருமான இழப்பீட்டு சலுகைக்கு" (Income Replacement Benefit) தகுதியில்லாதவர், அத்துடன் மூன்றாவது அடுத்த அம்சத்தில் குறிப்பிடப்பட்ட "பராமரிப்பவர் சலுகை" (Caregiver Benefit) போன்றவற்றினை பெறுவதற்கும் தகுதியில்லாதவர் இப்பிரிவில் இருந்து கிழமைக்கு $185 டொலர் நட்டஈடாக பெறலாம்.

3. பராமரிப்பவர் சலுகைகள் (Caregiver Benfit)
விபத்தில் காயமடைந்தவரில் தங்கியிருப்போர் எவராவது இருந்தால், அதாவது பிள்ளைகளை பராமரிக்க வேண்டிய நிலைமை இருந்தால் ஒரு பிள்ளைக்கு கிழமைக்கு $250 டொலர் மேலதிக ஒவ்வொரு பிள்ளைக்கும் $50 டொலர் இப்பிரிவில் இருந்து பெறலாம்.

மேலே குறிப்பிடப்பட்ட "வருமான இழப்பீட்டு சலுகை" வருமானம் இல்லாதோருக்கு வழங்கும் சலுகை" ஆகிய பிரிவில் இருந்து நட்டஈடு பெறும் சந்தர்ப்பம் இருந்தால் இப்பிரிவில் இருந்து நட்டஈடு பெறுவது தடைப்படலாம்)

4. மருத்துவ, புனர்வாழ்வு, மருத்துவ தாதிகள் சலுகைகள் (Medical rehabilitation & Attendant car benefits)

இவ் அம்சத்தில் பல்வேறு வகையான செலவுகளும், அதற்கு வழங்கும் இழப்பீடுகளும் அடங்கும். ஆகக் கூடுதலாக மாதம் $3000 டொலர் வரை மொத்தம் $72,000 டொலர் வரை பெறலாம். விபத்தில் உடல் காயம் என்பது, வாழ்வில் நிரந்தரமாக இயங்க முடியாத நிலைமை என்றால் (Catastrophic Impairment) மாதம் $6,000 டொலர் என பெற்று மொத்தம் ஒரு மில்லியன் டொலர் வரை பெறலாம்.

5. ஏனைய மேலதிக செலவுக்கான கொடுப்பனவுகள் (Payment of other Expenses)

மேலதிக செலவுகள் என்பது நியாயமாக பின்வருமாறு வகைப்படுத்தலாம். செலவழித்த பல்வேறு வகையான செலவுகள்

1. Educational Expenses.
2. Expenses of Visitors
3. House Keeping & Home Maintenance Expenses
4. Damage, to Clothing, Glasses, Hearing aids Etc.
5. Death & Funeral Expenses






வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.

பரம்ஜி - 416.230.1107

PARAM GNANASWARAN
Broker
HOME LIFE GTA REALTY INC. Brokerage*
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
416.321.6969
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
905.712.2666
HOMELIFE HIGHER STANDARDS
* INDEPENDENTLY OWNED AND OPERATED
paramg@gmail.com

# உலக கிண்ணம் - 2007

## அசத்தப்போவது யாரு!!!

### விளையாட்டுத் தகவல்கள் 208

உலக துடுப்பாட்ட ரசிகர்களுக்கு இனி கொண்டாட்டம் தான். மார்ச் மாதம் 13ஆம் திகதி மேற்கு இந்திய தீர்வுகளுக்கு எதிராக பாகிஸ்தான் அணி முதல் மோதலின் இருந்து தொடங்குகின்றது. இந்த துடுப்பாட்ட திருவிழா! ஏப்பிரல் மாதம் 28ஆம் திகதி Barbados இல் Kensington Oval மைதானத்தில் இறுதியாட்டம் நடைபெறவுள்ளது.

இந்த ஒன்றரை மாத திருவிழாவில் அசத்தப் போவது யாரு?

**கிரிக்கெட் ஆட்டத்தின் வரலாறு?**
இன்று உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்களை ஈர்த்துள்ள துடுப்பாட்ட விளையாட்டை, ஆரம்ப காலக் கட்டத்திலிருந்து வளர்த்து வந்தவர்கள் இங்கிலாந்து மக்களே என்பதை மறுப்பதற்கில்லை. அவ்விளையாட்டு பின்னர் அவுஸ்திரேலியர்களாலும் விளையாடப்பட்டு வளர்க்கப்பட்டு வந்தது. ஒரு காலகட்டத்தில் இரண்டு நாடுகள் மட்டுமே ரெஸ்ற் அந்தஸ்தை பெற்றிருந்தன. அவற்றுக்கிடையே மட்டும் கிரிக்கெட் விளையாடப்பட்டு வந்ததாக வரலாற்றுச் சான்றுகள் தெரிவிக்கின்றன.

அதன் பின்னர் மற்ற நாடுகளுக்கும் கிரிக்கெட்டை பரப்ப வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. அதன் காரணமாக 1889ஆம் ஆண்டு தென் ஆபிரிக்கா ரெஸ்ற் அந்தஸ்தை பெற்றது. இதனால் ரெஸ்ற் அந்தஸ்து பெற்ற நாடுகளின் எண்ணிக்கை மூன்றாக உயர்ந்தது. இங்கிலாந்து அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளில் ஏற்பட்ட வளர்ச்சியை காட்டிலும் தென் ஆபிரிக்காவில் கிரிக்கெட் அசுர வளர்ச்சி பெற்றது. அப்போதே அங்கு உலகத்தரத்துக்கு ஈடான வீரர்கள் உருவாகத் தொடங்கினர்.


## எஸ். கணேஷ்


1970 ஆம் ஆண்டு, சர்வதேச போட்டிகளில் பங்கேற்க தென் ஆபிரிக்காவுக்குத் தடை விதிக்கும்போது, அந்த நாடு அவ்விளையாட்டில் ஜாம்பவானாகத் திகழ்ந்ததை வரலாறு அறிஞர்களால் மறக்கமுடியாது. ரெஸ்ற் அந்தஸ்தை பெற்ற மூன்று நாடுகளும் சேர்த்து சர்வதேச அளவில் கிரிக்கெட் விளையாட்டுக்கென தனி அமைப்பை உருவாக்க எண்ணினர். இங்கிலாந்தில் உள்ள உலகப்புகழ் வாய்ந்த 'லார்ட்ஸ்' மைதானத்தில் அதற்கான ஆலோசனையை நடத்தினர்.

அதன் பயனாக 1909 ஆம் ஆண்டு யூன் 15ம் திகதி ஐ.சி.சி உருவாக்கப்பட்டது. அப்போது ஐ.சி.சி என்பது 'இம்பீரியல் கிரிக்கெட் கொன்ஃபரன்ஸ்', என்று அழைக்கப்பட்டது. அதன் பின்பு ஐ.சி.சி தனித்து இயங்க விதிகளும், சட்டங்களும் இயற்றப்பட்டன. இதையடுத்து ஐ.சி.சி ஆக்கபூர்வமாக செயல்படத் தொடங்கியது. ரெஸ்ற் கிரிக்கெட் விளையாடும் நாடுகளின் எண்ணிக்கையும் அதிகப்படுத்தப்பட்டது. 1928இல் மேற்கிந்தியதீவுகளுக்கும், அடுத்த இரண்டு ஆண்டுகளில் நியூசிலாந்துக்கும், அதற்கடுத்த இரண்டு ஆண்டுகளில் (1932இல்) இந்தியாவுக்கும் ரெஸ்ற் போட்டிகளில் விளையாடும் அந்தஸ்து வழங்கப்பட்டு ஐ.சி.சி யில் உறுப்பு நாடுகளாக சேர்க்கப்பட்டன. இதையடுத்து, ரெஸ்ற் கிரிக்கெட் விளையாடும் நாடுகளின் எண்ணிக்கை ஆறு ஆக அதிகரித்தது. இந்தியாவிலிருந்து பிரிந்த பிறகு, 1952ஆம் ஆண்டு பாகிஸ்தான் ரெஸ்ற் அந்தஸ்தை பெற்றது.

1965ஆம் ஆண்டு இம்பீரியல் கிரிக்கெட் கொன்ஃபரன்ஸ் (ஐசிசி) எனும் பெயர் இன்டர்நேஷனல் கிரிக்கெட் கொன்ஃபிரன்ஸ் (ஐசிசி) என உறுப்பு நாடுகளால் மாற்றம் செய்யப்பட்டு அழைக்கப்பட்டு வந்தது. புதிய கிரிக்கெட் சட்டங்களும், விதிமுறைகளும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டன. ரெஸ்ற் கிரிக்கெட் அந்தஸ்து பெறாத நாடுகளும் ஐ.சி.சியில் உறுப்பினர்களாக சேரலாம் என விதிமுறை கொண்டுவரப்பட்டது.

1970இல் நிறவெறி சர்ச்சையில் சிக்கியதால், தென் ஆபிரிக்காவிடமிருந்து உறுப்பினர் பதவியை பறித்தது ஐ.சி.சி. 1981 இல் இலங்கை உறுப்பினராக சேர்க்கப்பட்டு, ரெஸ்ற் அந்தஸ்தும் வழங்கப்பட்டது. இன்டர்நஷனல் கிரிக்கெட் கொன்ஃபெரன்ஸ் எனும் பெயர், 1989ஆம் ஆண்டு 'இன்டர்நஷனல் கிரிக்கெட் கவுன்சில்' என மாற்றப்பட்டது. நிறவெறி சர்ச்சையால் தண்டனையை அனுபவித்து வந்த தென் ஆபிரிக்காவுக்கு 1991 இல் மீண்டும் ரெஸ்ற் அந்தஸ்து வழங்கப்பட்டது. 1992 இல் சிம்பாப்வேக்கும், அதனைத் தொடர்ந்து 2000 ஆண்டில் வங்கதேசத்துக்கும் ரெஸ்ற் அந்தஸ்தை வழங்கியது ஐ.சி.சி இதையடுத்து ரெஸ்ற் கிரிக்கெட் விளையாடும் நாடுகள் எண்ணிக்கை 10 ஆக உயர்ந்தது. தற்போது ஐ.சி.சியில் 97 உறுப்பினர்களும், 10 ரெஸ்ற் கிரிக்கெட் விளையாடும் நாடுகளும் இருக்கின்றது. 32 துணை உறுப்பினர்களும், 55 அங்கீகரிக்கப்பட்ட உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர்.

உலகக் கோப்பை போட்டி உள்பட சர்வதேச அளவிலான போட்டிகளை நடத்த ஒப்புதல் அளிப்பது, அதற்கு நடுவர்களை நியமிப்பது உள்ளிட்ட முக்கிய பணிகளை ஐ.சி.சி மேற்கொண்டு வருகிறது. அதன் தலைவராக பெர்ஸி சன் உள்ளார். தலைமை நிர்வாக அதிகாரியாக மால்கம் ஸ்பீட் உள்ளார்.

### உலக கிண்ணம் 2007

| Group A | Guopb B | Group C | Group D |
|---|---|---|---|
| அவுஸ்திரேலியா | இந்தியா | கனடா | மே.இ.தீவுகள் |
| நெதர்லாந்து | சிறிலங்கா | இங்கிலாந்து | பாகிஸ்தான் |
| ஸ்கொட்லாந்து | பங்களாதேஷ் | கென்யா | அயர்லாந்து |
| தென்ஆபிரிக்கா | பேர்முடா | நியூசிலாந்து | சிம்பாவே |

### சில அணிகளின் நிலவரங்களை பற்றி இங்கு உற்று நோக்குவோம்.

**அவுஸ்திரேலியாவின் சரிவு!**
கடந்தகிழமை நடைபெற்ற மூன்றாவது மற்றும் கடைசி ஒரு தின கிரிக்கெட் போட்டியில் ஒரு விக்கெட் வித்தியாசத்தில் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியது நியூசிலாந்து. இதன்மூலம் மூன்று போட்டிகள் கொண்ட தொடரை 3 - 0 எனக் கைப்பற்றியது நியூசிலாந்து.

இங்கிலாந்திடம் முத்தரப்பு தொடரில் பெற்ற இரண்டு தோல்விகளைத் தொடர்ந்து உலகச் சாம்பியன் அவுஸ்திரேலியா தொடர்ச்சியாக ஐந்து தோல்விகளைப் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து - அவுஸ்திரேலியா நாடுகளுக்கிடையே சேப்பல் - ஹாட்லி கோப்பை துடுப்பாட்ட போட்டி நியூசிலாந்தில் நடைபெற்றது. தொடரின் இறுதி மற்றும் மூன்றாவது போட்டி வெலிங்டனில் பகலிரவு ஆட்டமாக செவ்வாய்கிழமை நடைபெற்றது. முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 50 ஓவர்களில் 346 ஓட்டங்கள் குவித்தது. 347 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் கடினமான இலக்குடன் களம் இறங்கிய நியூசிலாந்து அணி மூன்று பந்துகள் மீதமிருக்கையில் ஒன்பது விக்கெட்டுகளை இழந்து இலக்கை அடைந்தது.

மெக்மில்லன் அபாரமாக ஆடி 117 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார். இவரின் அதிரடியான ஆட்டமே அணிக்கு வெற்றி தேடித்தந்தது. தொடக்கத்தில் 50 ஓட்டங்களைச் சேர்ப்பதற்குள் நாலு முக்கிய விக்கெட்டுகளை விரைவில் நியூசிலாந்து இழந்தது.

நாலாவது விக்கெட்டுக்கு மெக்மில்லன், புளூட்டன் ஜோடி நிலைத்து ஆடி அணியைச் சரிவிலிருந்து மீட்டது. புளூட்டன் அதிரடியாக ஆடி 51 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த மெக்கல்லம், மெக்மில்லனுடன் ஜோடி சேர்ந்தார். இருவரும் அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சை துவம்சம் செய்தனர்.

**67 பந்தில் சதம்** - மெக்மில்லன் அதிரடியாக ஆடி 67 பந்துகளில் சதம் அடித்தார். மெக்கல்லம் அரைசதம் அடித்தார்.

இதனால் அணியின் ரன் விகிதம் ஜெட் வேகத்தில் உயர்ந்தது. 117 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் வாட்சன் பந்துவீச்சில் மெக்மில்லன் ஆட்டமிழந்தார். இவரது ஓட்டத்தில் 13 பவுண்டரிகளும், ஐந்து சிக்சர்களும் அடங்கும். ஆறாவது விக்கெட்டுக்கு மெக்மில்லன் - மெக்கல்லம் ஜோடி 165 ஓட்டங்களைக் குவித்தது.

அதன் பின்னர் பிராங்க்ளின், டஃபி, கில்லெஸ்பி ஆகியோர் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

கடைசி ஏழு பந்துகளுக்கு எட்டு ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில் மெக்கல்லம் அபாரமாக பவுண்டரி அடித்து அணிக்கு வெற்றி தேடித் தந்தார். மெக்கல்லம் 86 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

அவுஸ்திரேலிய தரப்பில் ஜோன்ஸன் மூன்று விக்கெட்டுகளையும், டெயிட், வாட்சன் தலா இரண்டு விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

**ஹேடன் சாதனை வீண்** - நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணி முதலில் பேட் செய்தது. ஹேடன், வாட்சன் ஜோடி தொடக்கம் முதலே அதிரடி ஆட்டத்தை கையாண்டது. வாட்சன் 68 ஓட்டங்கள் சேர்த்து ஆட்டமிழந்தார்.

அதன்பின்னர் வந்த ஹாடின், ஹாட்ஜ், ஹுஷே, ஒயிட் ஆகியோர் ஹேடனுக்கு ஒத்துழைக்காமல் விரைவாக ஆட்டமிழந்தனர். ஆட்டமிழந்தனர். ஆனால் நியூசிலாந்து அணியின் பந்துவீச்சை விளாசித் தள்ளினார்.

**ஹேடன் சாதனை** - ஹேடன் 181, வோக்ஸ் 16 ஓட்டங்களில் ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஹேடன் 166 பந்துகளில் 181 ஓட்டங்களைக் குவித்தார். அதில் 10 சிக்சர், 11 பவுண்டரிகள் அடங்கும். இதற்கு முன்பு மார்க் வாஹ் அடித்த 173 ஓட்டங்களே, அவுஸ்திரேலியாவை சேர்ந்த தனிநபர் ஒருவரின் அதிகபட்சமாக இருந்தது. அச்சாதனை ஹேடன் தற்போது முறியடித்தார்.

இப்போட்டியில் இரு அணிகளும் சேர்ந்து 26சிக்சர்களும், 50 பவுண்டரிகளும் அடித்தனர். ஆட்டநாயகன் விருது ஹேடனுக்கு வழங்கப்பட்டது.

**அவுஸ்திரேலிய அணியின் பக்கம் ஒரு நோக்கு**
உலகக் கோப்பை துடுப்பாட்ட போட்டியில் கலந்து கொள்ளும் அவுஸ்திரேலிய அணியில் ஆல் ரவுண்டர் ஸ்டுவர்ட் கிளார்க், வேகப்பந்து வீச்சாளர் கேமரூன் வொயிட் ஆகியோர் வாய்ப்பை இழந்துள்ளனர்.

அதேசமயம் காயத்தால் அவதிப்பட்டுவரும் ஆல்ரவுண்டர் ஆண்ட்ரு சைமண்ட்ஸ், (படம்) விக்கெட் கீப்பர், பீராட் ஹாடின் ஆகியோர் அணியில் இடம் பெற்றுள்ளனர்.

கையில் ஏற்பட்டுள்ள காயத்தால் அவதிப்பட்டு வரும் சைமண்ட்ஸ் உலகக் கோப்பை போட்டியின் லீக் போட்டிகளில் சைமண்ட்ஸ் விளையாடமாட்டார் என்றும் அடுத்து வரும் முக்கியப் போட்டிகளில் அவர் விளையாடுவர் என்றும் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வாரியத்தின் தேர்வாளர் தலைவர் ஹில்டிச் தெரிவித்துள்ளார்.

மேலும் சில போட்டிகளில் கில்கிறிஸ்ட்டுக்கு ஓய்வளிக்கும் பட்சத்தில் அவருக்கு பதிலாக கீப்பிங் பணி செய்ய நியூ சவுத் வேல்ஸ் விக்கெட் கீப்பர் பிராட் ஹாட்ஜி சேர்க்கப்பட்டுள்ளார்.

ஸ்டுவர்ட் கிளார்க், கேமரூன் வொயிட் ஆகியோர் துரதிருஷ்டவசமாக அணியில் வாய்ப்பை பெறவில்லை. அவர்களுக்கு எதிர்காலத்தில் அணியில் சிறந்த வாய்ப்பு உள்ளது என்று அவர் தெரிவித்தார். மார்ச் ஆறாம் திகதி நடைபெறும் பயிற்சிப் போட்டியில் சிம்பாப்வே அணியுடன் மோதுகிறது அவுஸ்திரேலியா. மார்ச் ஒன்பதாம் திகதி நடைபெறும் முதல் போட்டியில் ஸ்கொட்லாந்து அணியுடனும் இரண்டாவது போட்டியில் நெதர்லாந்துடனும், மூன்றாவது போட்டியில் தென் ஆபிரிக்காவுடனும் மோதுகிறது.




தொடர்ச்சி 17ஆம் பக்கம்



## ஞானம்ஸ் ஸ்ரூடியோ

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12
*Professional Photographer -* கதிர்
416-750-8118
2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough



## ELECTRICAL WORKS



FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும்.
நியாயமான கட்டணம். தரமான சேவை.
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: **416-286-2880**

# நிலையான சொத்தின் முதலீடுகள்

வீடு என்று பொதுவாக சொல்லும்போது, இந்தபதம் மற்றைய நிலையான சொத்துகளையும் வீடு, கொண்டோ, நிலம், வியாபார கட்டிடம் மனதில் வைத்துக் கொண்டே கூறப்படுகின்றது என்பது யாவரும் அறிந்ததாகும்.

ஒரு வீட்டை வாங்கும்போது, முக்கியமானதான பெரிய முதலீடு "Down Payment" ஆகும். அதாவது "ஆரம்ப முதலீடு" ஆகும். இதனை விட மற்றும் பல செலவுகள் உள்ளன. இவை என்ன என்பதனைப்பற்றி சிறிது பார்ப்போம்.

**1. ஆரம்ப முதலீடு** _ Down Payment

இந்த பெறுமதி வீட்டின் விலைக்கு ஏற்ப மாறலாம். இப்பொழுது பூச்சியம் முதலீட்டுடனும் வீடுவாங்கலாம். (Zero Down Payment) என்பது அனேகர் அறிந்த உண்மை. இதனை விட 5%, 10%, 15% என இவ்வாறு முதலீட்டை ஒவ்வொரு வரினதும் வசதிக்கேற்ப மாற்றிக்கொள்ளலாம்.

ஆரம்ப முதலீட்டைப்பற்றி ஆராயும்போது, முக்கியமாக அறியவேண்டியது பூச்சிய முதலீட்டுடன் வாங்கும் போது, நிதிநிறுவனத்தின் முதலீட்டை (Example, CMHC Insurance) காப்புறுதியின் அளவு அதிகமாகவும், அடமானத்திற்குரிய வட்டிவீதமும் வழக்கமாக எடுக்க இருப்பதைவிட அதிகமாக இருக்கலாம். பொதுவாக வீட்டின் விலையின் 25% இற்கு குறைவாக முதலீடு வைக்கும்போது காப்புறுதி எடுக்கவேண்டும். இந்தக்காப்புறுதியின் செலவு, ஆரம்ப முதலீட்டைப்பொறுத்தே காணப்படும்.

கூடிய முதலீடு செய்யும்போது குறைந்தளவு காப்புறுதி எடுக்க வேண்டி ஏற்படும்.

**2. சட்டச் செலவுகள்** (Legal Fees)

வீடு வாங்குவதற்கு, சட்டத்தரணி ஒரு முக்கிய பகுதி வகிப்பதால் சட்டத்தரணியின் செலவுடன் கூடிய மற்றைய செலவுகளும் அடங்குகின்றன. இந்தச் செலவுப்பகுதியும் வீட்டின் விலைக்கு ஏற்ப அதிகரிக்கலாம். பொதுவாக சட்டச்செலவுகள் $1100 - $1,300 வரை ஏற்படலாம்.

(அடுக்குமாடிக் கட்டிடத்திற்கேற்ப மாறும் இச்செலவுகள் புதிதாக நிர்மாணம் செய்த வீடுகள், திரும்பி விற்கின்ற வீடுகளிற்கேற்ப சிறிதளவு மாற்றம் ஏற்படலாம்.)

**3. காப்புறுதிச் செலவு**

ஏற்கனவே கூறப்பட்டது போல், காப்புறுதிச் செலவு பொதுவாக கடன் எடுக்கப்படும் மோட்கேஜின் (அடமானம்) பெறுமதியுடன் சேர்த்து கொள்ளப்படும். ஆனால் காப்புறுதிக்கான செலவு உடன் கொடுக்க வேண்டும்.

PST (Provincial sales tax) ஐ 8% செலுத்தவேண்டும். உதாரணம் - வீட்டின் விலை $300,000, 20% முதலீடு கடன்பெறும் தொகை: $240,000 (300,000 - 60,000)

காப்புறுதியின் அளவு 1.0% X 240,000 = $2,400

∴ PST இன் அளவு = 2,400 X 8% = $19,200 = $192

இந்தப் பெறுமதி செலவு செலுத்தப்படவேண்டும். ஆனால் காப்புறுதியின் அளவு $2,400 அடமானத்துடன் சேர்க்கப்படும்.

கடன்பெறும் அடமானத்தின் அளவு $240,000 + 2400 = $242,400 ஆக அதிகரிக்கும்.

உண்மையாக $240,000 கடன் பெற்றபோதும் காப்புறுதியின் அளவு $2400 ஐ கூட்டும்போது நாம் கடன் பெற்ற தொகை $242,400 ஆக அதிகரிக்கின்றது. எனவே இந்த தொகைக்கு தான் அடமானத்தை திருப்பிக் கொடுப்பதை செலுத்த வேண்டும் எனக் கொள்ளவேண்டும்.

**4. அடமான பத்திரச் செலவு** (Mortgage Application fee)

பொதுவாக $235 ஆகக் காணப்படும் 25% முதலீடு செய்தால் குறைந்தளவு ஆகும். சில நிதி நிறுவனங்கள் தமது வாடிக்கையாளர்களிற் கேற்ப சில சலுகைகளும் செய்யும் என்பதனையும் கவனிக்க.

***5. Inspection Fee***

வீட்டின் நிலைமைகளை ஆராய்ந்து, சோதித்து அதன் ஏற்ற இறக்கங்கள், திருத்த வேலைகள் (எவ்வாறு வீட்டின் பாகங்களை பராமரிக்க வேண்டும் என்பன) பற்றிய தகவல் தருவதற்கு, தேவையான சோதகரின் செலவு. இது பொதுவாக $250 தொடக்கம் $500 வரை இருக்கலாம்.

அத்துடன் வீட்டின் அளவு அதில் ஏற்படும் சிக்கல்களிற்கேற்ப மாறுபடும் என்பதனையும் கவனத்தில் கொள்ளவேண்டும். இதற்கேற்ப இந்தச் செலவு மாறலாம்.

குறிப்பு - புதிதாக நிர்மாணம் செய்யப்பட்ட வீடுகள் வாங்கும்போது, சில வாங்குனர்களை, PDT என்று அழைக்கப்படும், Pre - Delivery Inspection இற்கும் Inspector ஐ அழைத்து செல்வது வழக்கம். இதற்குரிய செலவும் மாறுபடும்.

**6. உறுதி மாற்றுவரி** (Land Transfer Tax)

இந்தப்பணம் அரசிற்கு கொடுப்பனவு செய்யப்படுவது இதன் பெறுமதியும் வாங்கிய சொத்தின் விலையில் தங்கியுள்ளது. விலை கூடிய சொத்திற்கு அதிகமாகவும், குறைந்ததிற்கு, குறைவாகவும் அறவிடப்படும்.

இந்தளவு ஒரு சூத்திரத்தின்படி கணிக்கப்படும். $55,000 இற்கு குறைவாக 1/2வீதமும், $55,000 இற்கும் $250,000 இற்கு இடையில் 1 வீதமும் $250,000 இற்கும் $400,000 இற்கும் 1.5%, ஆகவும் $400,000 இற்கு மேற்பட்ட வீடுகளிற்கு 2%வீதமும் அறவிடப்படும். அத்துடன் விவசாய நிலத்திற்கு வித்தியாசமாகவும், வெளிநாட்டவர் கள் வாங்கும்போது வேறுமாதிரியும் அறவிடப்படும்.

உதாரணம் வீட்டின் விலை $450,000 எனக் கொண்டால் Land Transfer Tax உறுதிமாற்றுவரி

= $55,000 X 0.5% +(250,000 - 55,000) X 1%

+ (400,000-250,000)X1.5%+(450,000-400,000) X2%

= 275+1950+2250+1000 = $5,475

Land Transfer Tax = $5,475 ஆகும்.

**7. நிலஅளவைப் படச்செலவு** (Survey Plan)

பொதுவாக ஆஸ்தி வாங்கும்போது ஏற்கனவே உரித்து கொண்டுள்ளவரிடம் இந்த நிலை அளவை இருக்கலாம். அவரிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். அவர்களிடம் இல்லாத நிலையில் இலகுவாகப் பெற்றுக்கொள்ள பல வழிகள் உண்டு. அவற்றையும் கவனத்தில் கொள்க.

எந்த வழிவகைகளிலும் கிடைக்காத நிலையில், புதிதாக நிலஅளவை செய்யப்பட வேண்டும். இதற்கு $900 - $1,000 வரை தேவைப்படலாம்.

குறிப்பு - • புதிதாக வாங்கும் வீடுகளிற்கு வீடு நிர்மாணம் செய்யும் நிறுவனத்திடம் இருந்து கிடைக்கும்.

• அடுக்குமாடிக் கட்டிடத்திற்கு Survey Plan தேவை இல்லை.

**8. புதுவீடுகளிற்காக உத்தரவாத கட்டணம்** (Warranty Premium)

புதிதாக நிர்மாணம் செய்யப்படும் அடுக்குமாடி, தொடர், தனிவீடுகள் போன்றவற்றிகு புது வீடுகளிற்கான உத்தரவாதக் காலகட்டுப்பணம் செலுத்தவேண்டும்.

**9. உரித்துக்காப்புறுதி** (Title Insurance)

இப்பொழுது நடைபெறும், முறையற்ற தொல்லைகளால் உரித்துக்காப்புறுதி முக்கியமாகத் தேவைப்படுகின்றது. அனேகமான சட்ட வல்லுனர்கள் நிதி நிறுவனங்கள் இந்தக காப்புறுதியை கொள்வனவு செய்யுமாறு அறிவுறுத்துவது நல்ல விடயமாக தெரிகின்றது. காப்புறுதி இல்லாமல் அடமானம் கொடுக்க நிதி நிறுவனங்கள் தயங்குகின்றன.

பல காப்புறுதி நிறுவனங்கள் இந்தக்காப்புறுதியை வழங்குகின்றன. எனவே இந்தப்காப்புறுதி எடுப்பது நல்லது. இதற்குரிய செலவு, காப்புறுதி நிறுவனங்களிற்கேற்ப மாறுபடும். உதாரணமாக

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

## தொடர் - 246

வீட்டின்விலை $500,000 இற்கு குறையுமானால் $200 + Pst (குறிப்பு $500,000 இற்கு மேல் $100 மேலதிகம்) மற்றும் Legal Fee உம் உண்டு என்பதனையும் கவனிக்கவும்.

குறிப்பு - ஏற்கனவே வீடு வைத்திருப்பவர்கள், அவர்களின் வீட்டில் அடமானம் (Mortgage) இல்லாமல் இருந்தாலும் இந்தக் காப்புறுதி எடுத்து வைத்திருப்பது நல்லது.

**10. இடம் மாறுவதற்கான செலவு** (Moving Expenses)

மேலே காட்டப்பட்ட செலவுகளை மனதில் கொண்டு உங்கள் வீட்டுப்பிரதிநிதியுடன் கலந்தாலோசித்து முடிவு எடுக்கவும்.

• பொதுவாக வீட்டின் விலையின் 2% - 1.5% வரை இந்தச் செலவு வரலாம் என மனதில் கணக்கு வைத்துக்கொள்ளலாம்.




இப்பொழுது இரு இடங்களில்,

HomeLife GTA Realty Inc., Brokerage*

HOMELIFE HIGHER STANDARDS

1711 McCowan Rd. #206, Toronto - 416.321.6969

145 Traders Blvd # 28, Mississauga - 905.712.2666

*Independently owned & operated

Raja M. Mahendran, P. Eng.

(Broker / Owner)

Space Available for Lease / Sale

Optical Business, Physiotherapy, Take-out Restaurant, Travel Agency, Florist , Printing & SPA

Nantha Aiyadurai

Cell: 613 850 9931

COLDWELL BANKER COBURN REALTY

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்

Buying or Selling

Relocation Service

OTTAWA>>><<<GTA



நந்தா ஐயாத்துரை

Business: 613 823 7555 Fax: 613 825 8177 3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

# பெற்ற வயிறு

நிமிர்ந்து நிற்கும் காடுசூழ் செம்மண் நிலத்தில்
கழுத்து நறுக்கப்பட்ட கற் சுவர்களின்மீது
கொப்பளிப்பான் ஆறிய
அடையாளங்கள் தோன்றுகின்றன

அடர்ந்த பற்றைக்காட்டை ஊடறுத்து
நடுக்காட்டில் நிற்கும்
தொலைதொடர்புக் கோபுரத்தை
வலம்வந்து
எமை ஏற்றிச் சுற்றிச்சுழன்று ஓடுகின்றது
பேரூந்து

ஆஸ்பத்திரி எல்லைக்குள்
கால்களைத் தொங்கவிட்டு
வெடிப்புச் சிதைவுளை ஒட்டுகின்ற
மேசன்மாரை வியர்வை எரிக்கின்றது

கட்டில்கள் நிரம்பி வழிந்து
சுவர் ஓரம் பாயில் படுத்துக் காறித் துப்பும்
தோல் ஒட்டிய எலும்புகளில்
கண்களைத் தேடவேண்டும்

களைகட்டிய மருத்துவரின் முகத்தில்
மின்னும் கவலைக் கீற்றுக்கள்
கால்கள் நிலத்தில் பதியாமல்
கைகளை வேகமாய் அசைக்கும் தாதிகள்

ஊரின் மத்தியின் வெண் மணலில்
சுனாமி ஒன்றாகப் புதைத்த குழி மேட்டில்
உயரத்தில் அசைகின்றன கொடிகள்

தலையைப் பிளக்கும் வெயிலின்
கூடாரப் பந்தலுக்குள்
பாடம் நடத்தும் வாத்தியார்
அடிக்கடி விழுங்குகிறார் பனடோல்

கடற்கரை ஓரம் தீப்பந்தங்கள் ஏந்தி
நடுச்சாமம் கடந்த முழு நிலவில்
அந்திரட்டிக் கல் போடுகின்றனர்

காலைச் சூரிய மினுக்கத்தில்
முகத்தில் மீசையற்ற மழித்த மொட்டைகள்,
தலையால் நடந்து தத்தளிக்கும்
ஆண் விதவைச் சமுதாயம்

பின் வீட்டின் ஒதுக்குப்புறத்தில்
ஆலமர அடி நிழலில்
பனை வடலிக் காற்றுக்குள்
சுருண்டு படுத்திருந்து,
ஆறுமாதக் குழந்தையை அள்ளிச் சென்றவனை
தம்மிடம் வா வா என்று அழைக்கும்
தாரம் இழந்து தள்ளாடி விழுவோரைப் பார்த்து,

எட்டி விலகி வேகமாய் நடந்து
இயமன் செல்கின்றான்.

முத்துராஜா



# திருக்காரைநகர்

பண்: நட்டபாடை

நற்றமிழின் அர்ச்சனையை நாடியருள் நாதர்
உற்றமக ளோடுமகிழ்ந் தாடுமொரு கூத்தர்
முற்றுகனி போன்றசுவை முத்திதர வல்லார்
கற்றவர்கள் வாழுந்திருக் காரைநக ராரே.

வெற்றுமனப் பூசைகளைச் சற்றும்விரும் பாதார்
உற்றவர்கள் மற்றவர்கள் என்றுணர மாட்டார்
செற்றவர்பு ரங்கள்விழச் செற்றபெரு மானார்
கற்றகலை வாணர்திகழ் காரைநக ராரே.

வல்வினைகள் போக்கியுயர் வாழ்வுதரும் வள்ளல்
கொல்புலியைக் கொன்றுரியைப் போர்த்தகுண வாளர்
தொல்புகழ்சி தம்பரத்தை யொத்தபதி சூழ்ந்தார்
கல்விகலை யோங்குபுகழ்க் காரைநக ராரே.

மீட்சியளித் தும்பர்குலம் மேலுயர வைத்தார்
ஆட்சிதமிழ் ஈழம்பெற ஆனவழி செய்வார்
மாட்சிமிகு தொண்டர்தொழு தேத்தமகிழ்ந் தான்ற
காட்சிதரு நாதர்திருக் காரைநக ராரே.

ஐவர்தமை ஆண்டுயர வைத்தருள வல்லார்
ஐயமுறு மாலயற்குச் சோதிவடி வானார்
சைவமதைத் தாரணியில் தழைக்கவழி செய்வார்
கைம்மலர்கள் ஏற்றுமகிழ் காரைநக ராரே.

ஆதியினில் ஆல்நிழலில் நால்வர்குரு வானார்
வேதனையைத் தீர்த்தருளும் விநாயகரைத் தந்தார்
வேதவைத் தீசுவரர் மேன்மைநலப் பூசை
காதலுறக் கண்டருளும் காரைநக ராரே.

பேசரிய விழாக்களினைப் பெட்புறவே செய்து
ஆசையற ஆண்டவனின் அன்பமுதம் ஊட்டி
மாசுமறு நீக்குமணி வாசகத்து மேன்மை
காசினிக்குக் காட்டுதிருக் காரைநக ராரே.

தேர்வகல நஞ்சருந்தித் தேவர்களைக் காத்தார்
ஆர்வலரின் அன்பினிலே ஆழ்ந்தருளும் தொண்டர்
வார்கழல்கள் காட்டிமணி வாசகரைக் கொண்டார்
கார்வயல்கள் நெல்கொழிக்கும் காரைநக ராரே.

பூணரவம் ஆர்க்கநடம் பொன்னரங்கிற் செய்வார்
நீணிலத்தில் தூதுசெல்ல நேர்பெறவே வந்தார்
பேணுமடி யார்கள்வினை தீர்த்தருளும் பித்தர்
காணிநிலச் செல்வமலி காரைநக ராரே.

வண்டமிழ்நக் கீரனுடன் வாதம்புரிந் திட்டார்
திண்டிறலர் கோட்டைகளைத் தீவிழுங்க வைத்தார்
எண்டிசையுங் கூடியெழு தொண்டர்தொழு தேத்தக்
கண்டுமகிழ்ந் தேயருளுங் காரைநக ராரே.

காரைநகர் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு மேற்காகவுள்ள சப்த தீவுகளில் ஒன்று. அதன் சிவன் கோயில் ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படுவது. மணிவாசகர் விழாவுக்குப் பெயர்பெற்றது. இறைவர்: சுந்தரேசுவரர். இறைவி: சௌந்தராம்பிகை.



**கவிஞர் வி. கந்தவனம்**

# விடுதலையின் பாதையில் ...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

அந்தப்பெண்ணை யார் பார்த்துக் கொள்கிறார்கள் என்பது போன்ற கேள்விகளுக்கு விடையே கிடைப்பதில்லை. இதை அப்படியே விட்டுவிட்டார்கள். இருவருக்கும் அதே சுதந்திரம் இருந்தால் அது வேறு ஒருவருக்கு மட்டும் இந்த சுதந்திரம் இருந்து இன்னொருவருக்கு இல்லாதபோது அது தீமை இழைப்பதாகத்தான் இருக்கமுடியும்.

துரதிஸ்டவசமாக அப்படியொரு சட்டம் போடப்பட்ட பிறகுதான் மகிழ்ச்சியாக சேர்ந்து வாழ்கிற ஆண்கள் மற்றும் பெண்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்று கருதுகிறேன்.

ஆமாம்! ஏனென்றால் இரண்டு பேர் முழு மகிழ்ச்சியாக ஆனந்தமாக சேர்ந்து வாழ்வது எப்போது சாத்தியமென்றால் அவர்கள் சுதந்திரமான நிலையில் சந்திக்கிறபோதுதான். ஒரு கட்டுப்பாட்டோடு சந்திக்க நேருமேயானால் பிறந்த நாள் முதல் அடிமையாகவே இருந்த ஒரு பெண்ணை திருமணம் செய்ய நேர்ந்தால் அந்தப் பெண்ணை உங்களுக்கு அடிமையாக இருக்கத்தான் பழக்கியிருப்பார்களே தவிர வேறு எதுவும் இருக்காது. இங்கு வாழ்வை அனுபவிப்பதற்கான எந்த வழியும் இல்லை. ஒருவேளை அதிகபட்சம் அந்த வாழ்க்கை அவளுக்கு வசதியாக இருக்கலாம். ஆனால் வாழ்க்கை ஆனந்தமாக இருக்கமுடியாது. அவள் வசதியாக இருப்பாள். உங்கள் தேவைகளைப் பார்த்துக் கொள்வாள்.

துரதிஸ்டவசமாக இன்றுகூட இதுதான் தொடர்கிறது. ஓர் உயிர் பெண்ணாகப் பிறந்த உடனேயே ஒன்று தன் தந்தைக்கு அல்லது கணவனுக்கு சேவைகள் செய்வதற்குத்தான் அந்தப் பிறப்பே எடுத்ததாகச் சொல்லப்படுகிறது. அதைத்தாண்டி எதுவுமேயில்லை என்பதுபோல சொல்லப்பட்டிருக்கிறது. அதுவும் இதைச் சொல்பவர்கள் யாரென்றால் அத்வைதம் பேசுகிறவர்கள்தான் இதைச் சொல்லிக் கொடுக்கிறார்கள். 'உலகில் எல்லாமே ஒன்றுதான் ஆனால் ஆண்களைவிடக் குறைந்தவள் பெண்' இது அவர்களுக்கு எப்படித் தோன்றியது என்று எனக்குப் புரியவில்லை. பிறப்பிற்குக் காரணமான பாலியல் ரீதியான வேற்றுமையைக் கூட ஏற்றுக்கொள்ள முடியாத யாருமே அத்வைதிகளாக இருக்கமுடியாது. ஆணுடைய வாழ்க்கை பெண்ணைச் சார்ந்து இருக்கிறது. எனவே அவளை ஒப்புக்கொள்ள இயலாவிட்டால் வாழ்க்கையின் அனைத்து இருமைகளையும் ஒன்றாக ஏற்றுக்கொள்வதென்பது சாத்தியமே இல்லாத ஒன்று. மனிதகுல வாழ்க்கையின் ஆதாரங்களில் ஆணைவிட பெண்ணுக்குத்தான் அதிகபங்கு இருக்கிறது. ஆணுக்குப் பங்கு ஒரு அளவு வரைதான். எனவே பெண்ணை ஏற்றுக்கொள்ளாதபோது ஆண் மிகவும் குறுகிய மனப்பான்மை கொண்டிருக்கக் கூடும் அல்லது அறியாமையில் இருக்ககூடும். ஆனால் இவை எல்லாமே சில வசதிகள் கிடைக்கின்றன என்பதனால் இருக்கிற குறுகிய மனப்பான்மைகள் தான். என்ன நடந்தாலும் வசதியாக இருந்தால் எதற்காக அதை விட்டுக்கொடுப்பது, அது சரியா, தவறா, என்பதெல்லாம் கேள்வியல்ல அதில் நன்மை கிடைக்கிறது என்றால் ஏன் விடவேண்டும் என்று நினைக்கிறார்கள். இந்த மனநிலை மாறாவிட்டால் அங்கே ஆன்மீகம் இருக்காது. அங்கே ஆன்மீகம் இருக்க வழியே கிடையாது.

இன்றுகூட நாம் பார்க்கிறோம். அம்மன் கோயில் முன்னால் போய் விழுந்து கும்பிடுகிற ஓர் ஆண் வீட்டுக்குப் போய் மனைவியை அடிக்கிறான். அவன் அறியாமை கொண்டவன் மட்டுமல்ல நேர்மை இல்லாதவன். குறுகிய மனம் இல்லாவிட்டால் இப்படியொரு பார்வை வராது.


KV TRUCK
DRIVING CENTER

- தமிழ் ஆங்கில மொழிகள் மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாக வழங்கப்படும். (One On One Training)
- சாரதி அனுமதிப்பத்திரத்திற்கு உத்தரவாதம் வழங்கப்படும்.
- உடனடி வேலைவாய்ப்புகள் எமது நிறுவனத்திலேயே வழங்கப்படும்.

Canada & USA
பெருந்
தெருக்களிலும்
பயிற்சிகள்
வழங்கப்படும்

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing

We also Accept
welfare &
unemployment

Truck Licence
From $699.00

இரண்டு
வாரங்களில்
நீங்களும் கனரக
வாகன
சாரதியாகலாம்



அழையுங்கள்: 647.274.0300
Kiruba : 905.480.9280



யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- பலன் பார்த்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361

# அறிந்த சேதி அறியாத விபரம்

## கன்னிப்பிறப்பு

அற்புதங்கள் இன்றும் நடைபெறு கின்றன. சென்ற மாதம் செய்தி ஊடகங்களைப் பார்த்தவர்கள் ஒரு செய்தியை கண்டிருப்பார்கள். இங்கிலாந்தில் உள்ள செஸ்ரர் விலங்குச் சாலையிலே அந்த அற்புதம் நடந்ததாகச் சொல்லியுள்ளனர்.



உலகின் மிகப் பெரிய ஓணான் வகையினைக் கொமொடோ டிறாகன் (Komodo dragon) என்பார்கள். இவ்வகை ஓணான் முதன் முதலாகக் கன்னிப்பிறப்பின் மூலம் இனப் பெருக்கம் செய்துள்ளது என்பதே அந்த வியப்பான செய்தி. பொதுவாக உயர் விலங்குகளிலே இனப் பெருக்கம் ஆண் பெண் கலவி மூலமாகவே நடைபெறுகிறது. ஆனால் சில கீழ்வகை விலங்குகளிலே இலிங்கமில் வகை (Asexual reproduction) இனப்பெருக்கம் நடைபெறுவதுண்டு. அதில் ஒரு வகையினை 'கன்னிப் பிறப்பு' (Parthenogenesis) என அழைப்பார்கள். பொதுவாக இனப் பெருக்கத்தின் போது பெண்ணினது முட்டை ஆணினது விந்துவால் கருக்கட்டப்படும். அதன் பின்னரே அந்த முட்டை விருத்தியுற்று ஒரு குஞ்சினையோ, குட்டியினையோ உருவாக்கும். இந்தக் கருக்கட்டல் நிகழ்ச்சி பெரும்பாலும் கலவியின் போது நடைபெறும். இவ்வகை இனப் பெருக்கலை இலிங்க முறை இனப் பெருக்கம் என்பார்கள். ஆணின் விந்துவால் முட்டை கருக்கட்டப்படாமல் விருத்தியுறுவதையே 'கன்னிப் பிறப்பு' என்பார்கள்.

யேசு பிரான் கன்னி மேரியினுக்கு



அப்படித் தான் அவதரித்தாராம். அக்காலத்தில் அது அற்புதம் எனக் கருதப்பட்டது. அவ்விதம் அற்புதம் ஒன்று நடைபெறும் என அதற்கு 1000 வருடங்களுக்கு முன்னரேயே பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டதாம். இத்தகைய அற்புதங்கள் மனித குலத்தில் இன்னும் நடைபெறவில்லை என்பது உண்மை என்றாலும், வருங்காலத்தில் நடைபெற முடியும் என்பதற்கு செஸ்ரர் விலங்குச் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சி நம்பிக்கை தருகிறது. அங்கே உள்ள 'புளோரா" எனும் பெயர் கொண்ட கொமொடோ டிறாகன் ஆண்வாடையே வேண்டாம் என்று தானும் தன்பாடும் என வாழ்ந்து வந்ததாம். திடீரென அது கருத்தரித்ததைக் கண்ணுற்ற பொறுப்பாளர்கள் ஆச்சரியப் பட்டார்கள். அது ஏழு முட்டடை-களை ஈன்றெடுத்தது. முலையூட்டிகள் தவிர்ந்த ஏனைய விலங்கினங்கள் யாவும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பவையே.

முலையூட்டிகளில் அக விருத்தி நடைபெறுகிறது. அதாவது தாயின் கருப்பையிலே விருத்தியுறுவதால் (Viviparous) விருத்தியுறும் முளை யத்திற்குத் தேவையான உணவினைச் சூல் வித்தகத்தின் (Placenta) ஊடாக தாய் சேயினுக்கு வழங்குகிறது. ஆனால் ஏனைய விலங்கு களில் புற விருத்தி (Oviparous) நடைபெறுவதால் விருத்தியுறுவதற்கு வேண்டிய உணவு முழுவதும் கருவூணாக (Yolk) முட்டையில் தேக்கி வைக்கப் பட்டுள்ளது. எனவே தான் இம் முட்டைகள் பெரிதாக உள்ளன. இங்கே முட்டை போடுவதற்குக் கலவி தேவையில்லை. ஆனால் முட்டை குஞ்சு உருவாவதற்குக் கலவி அத்தியாவசியம். ஆணுடன் கலவியில் ஈடுபடாமல் கோழி, ஊரினில் முட்டையிடுவது ஒன்றும் ஆச்சரியமில்லை. ஊரிலே உள்ளபோது நமது பாட்டிமார்கள் கோழி சாம்பல் குளித்து முட்டை போடுகிறது எனக் கூறுவதைக் கேட்டிருப்பீர்கள். அங்கே விஞ்ஞான உணமைக்குப் பாமர விளக்கம் கொடுத்தார்கள் அவர்கள். இங்கு அதனை அழகாக farm eggs என்கிறார்கள். கொமொடோ டிறாகன் இட்ட ஏழு முட்டைகளிலே இது வரை ஐந்து முட்டைகள் பொரித்துள்ளன. இங்கே ஆச்சரியம் அந்த கொமொடோ டிறாகன் தாயாகவும் தந்தையாவும் செயற்பட்டுள்ளமையே. ஏன் இந்தக் கன்னிப் பிறப்பு? எனக் கேட்கலாம். பொதுவாகவே விலங்குகளிலே பல்வேறு காரணங்களால் ஏற்படக் கூடிய அழிவினை ஈடுசெய்வதற்கு இலிங்கமுறை இனப் பெருக்கம் மட்டுமே போதாது எனும் விலங்கு வர்க்கங்களிலே இலிங்கமில் முறை இனப் பெருக்கம் நடைபெறுவதுண்டு. உயர்தர விலங்குகளிலே இந்த இலிங்கமில் முறை இனப் பெருக்கம் கன்னிப் பிறப்பின் மூலம் நடைபெறுகிறது.



**- கனக்ஸ் -**

எமது உடற்கலங்களிலே உள்ள நிறமூர்த்தங்கள் இரண்டு ஒத்த குழுக்களாகக் காணப்படுகின்றன (Diploid). இனப்பெருக்கக் கலங்கள் பிரிந்து முட்டை அல்லது விந்துவாக மாறுகின்ற போது இந்த இரண்டு குழுக்களில் ஒன்று மாத்திரமே (Haploid) அவற்றில் செல்கின்றன. இதனை ஒடுங்கற் பிரிவு என்பார்கள் (Reduction Division). இலிங்க இனப் பெருக்கத்தின் போது முட்டையும் விந்துவும் சேர்கின்ற போது அந்தப் பழைய இருமடிய நிலை ஈடு செய்யப் பட்டு விடுகிறது.

கன்னிப் பிறப்பில் என்ன நடைபெறுகிறது? கன்னிப் பிறப்பு நடைபெறுகின்ற பூச்சி இனம் தேனீக்கள். அவை சமுதாயமாக வாழ்கின்றவை. ஏறக்குறைய 30,000 தேனீக்கள் ஒரு சமுதாயத்தில் இருக்கும். சமுதாய வாழ்க்கை சீராக நடைபெறும் பொருட்டு அங்கே சாதிக் கட்டுப்பாடும் தொழிற் பங்கீடும் உள்ளது. ஆண்கள் அல்லது சோம்பிகள், இராணி, வேலையாட்கள் என மூன்று சாதி கள் உள்ளன. பெயருக்கு ஏற்ப ஆண்கள் சோம்பிகளாகவே உள்ளன. வேலையாட்கள் சேகரிக்கும் தேனினை உட்கொள்வதும் இராணியுடன் கலவி செய்வதும் அவற்றின் தொழில். ஆகவே பனிக்காலம் வரும் பொழுது எல்லாச் சோம்பிகளையும் ஈவிரக்கம் காட்டாமல் வேலையாட்கள் கொன்று விடுகின்றன. எனவே மீண்டும் வசந்தகாலம் வரும்பொழுது இராணியுடன் கலவி செய்வதற்காக ஆண்கள் தேவையாகின்றன. ஆண்கள் எங்கிருந்து வரும்? ஒரேவழி. கன்னிப்பிறப்பு!

இங்கு இராணி இடுகின்ற முட்டைகள் கருக்கட்டப் படாமலே விருத்தியுறுகின்றன. அத்தனையுமே ஆண்களாக விருத்தியுறுகின்றன. பிறகென்ன இராணி பாடு கொண்டாட்டம் தான். இராணியிலே ஒரு குழுவிலே 16 என இரண்டு குழு நிறமூர்த்தங்கள் ஒவ்வொரு கலத்திலும் இருந்தன. முட்டை உருவாக்குகையில் வழமையான ஒடுங்கற் பிரிவு நடைபெறுகிறது. எனவே ஒவ்வொரு முட்டையும் 16 நிறமூர்த்தங்களே கொண்டிருக்கும். அவசர தேவைக்காக உருவாக்கப்பட்ட ஆண்களில் 32 நிறமூர்த்தங்களுக்குப் பதிலாக 16 மாத்திரமே காணப்படும். சோம்பிகளின் விந்தாக்கதில் ஒடுங்கற் பிரிவு நடைபெறுவதில்லை.

கொமோடோ டிறாகனில் கன்னிப் பிறப்பு சற்று வித்தியாசமாக நடைபெறுகிறது. இங்கு முட்டை உருவாகும் பொழுது ஒடுங்கற் பிரிவு நடை-பெற்றாலும் கலம் இரண்டாகப் பிரியாமையால் மீண்டும் அந்த இரு நிறமூர்த்தக் குழுக்களும் ஒன்று சேர்ந்து விடுகின்றன. எனவே பழைய படி இருமடிய நிலை தோன்றுகின்றது. இங்கே பெண் கொமோடோ டிறாகன் ஆணாகவும் பெண்ணாகவும் தொழிற்பட்டுள்ளது. தனது முட்டையை தானாகவே கருக்கட்டியமையே அங்கே நடந்த அற்புதம். கன்னிப் பிறப்பு முளைவகையாக்கலில் (Cloning) இருந்து வேறுபட்டது. இங்கேயும் அனேகமாக பெண்



வழித்தோன்றல்களே தான் தோன்றுகின்றன. முளைவகையாக்கலின் போதும் பெண்வழித் தோன்றல்கள் தோன்றினாலும் அவை அப்படியே அத்தனை இயல்புகளிலும் தாயினையே ஒத்திருக்கச் செய்கின்றன. கன்னிப் பிறப்பின் போது தாயின் இயல்புகள் யாவும் வழித் தோன்றல்களில் இருக்க வேண்டிய அவசியமில்லை.


நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் - இலவச ஆலோசனை வழங்கப்படும்

**தீராத நோயினால் பீடிக்கப்பட்டுள்ளீர்களா?**



**சிறியோர் தொடக்கம் முதியோர்வரை இதுவரை தீராத வியாதியினால் பீடிக்கப்பட்டு குணமடையாமல் இருப்பவர்களுக்கு இயற்கை மூலிகைகளிலான தீங்கு விளைவிக்காத சூரணங்கள், குளிகைகள், லேகியங்கள், உயிர்ச்சத்துக்கள், பானங்கள் போன்றவற்றினாலும் சர்மத்தின் வெளிப்புறத்தே ஏற்பட்டிருக்கும் மாறாத நாள்பட்ட புண்களுக்கும், சொறியினால் ஏற்பட்டிருக்கும் காயங்களுக்கும் விபத்தினால் ஏற்பட்ட அடிகாய நோவிற்கும் ஏற்ற அனுபவ ரீதியாக கையாண்ட எண்ணையினால் குணமடைய தகுந்த ஆலோசனை! இலவசமாக வழங்கப்படும். இது தவிர தகுந்த அன்ன ஆகாரங்களினாலும் நோய்கள் நிவர்த்தி பெற வழியுண்டு.**

இலவச ஆலோசனைகளுக்கு : **416.439.8549**

**வைத்திய கலாநிதி கே.ரி. கோபால்**

D.A.M.S - R.A.M.P. (SriLanka) M.H.D.C (Madras) C.D.S. _ C.N.H.P. (Canada)

Herbalist - Sidha - Ayurvedic - Homeopathic & Biochemic Family Physician

LG.Ayurvedic Medical Services (SriLanka)

BREAD MASTER BAKERY

புதிதாகத் திருத்தி அமைக்கப்பட்ட வெதுப்பகம் பல்வேறு வகையான உணவுத் தயாரிப்புக்களுடன் ஆரம்பிக்கப்படவுள்ளது.



- **ரொட்டி வகைகள்**
- **புரியாணி வகைகள்**
- **புட்டு வகைகள்**
- **மரக்கறிச் சாப்பாடு**
- **சிக்கின், மட்டன் சாப்பாடு**
- **இடியப்பம்**
- **நூடில்ஸ்**

ஓடர்கள் (Order) ஏற்றுக்கொள்ளப்படும்

*மற்றும் சிற்றுண்டி வகைகள் அனைத்தையும் பெற்றுக்கொள்ளலாம்*

**கடை திறக்கும் நேரம்**

**காலை 6:00 மணி முதல்**

**இரவு 10:00 வரை**



உணவுகளை ருசித்து மகிழ்ந்திட அழையுங்கள்

416.299.5083

**31 Tapscott Rd. B3, Scarborough**

**Malvern Area**

மேலைத் தேசத்தில்
கீழைத் தேசத்து வாசனைகள்...

Niru BRAND®

எமது புதிய அறிமுகங்கள்




Improted & Marketed By:

**NIRU ENTERPRISES INC.**
40 Minuk Acres Scarborough.
Ontario. Canada, M1E 4Y6
Tel: 416-750-1976
Fax: 416-750-8779
www.niru.com

**NIRU(EUROPE) LTD.**
Unit 11, Mitcham Insustrial Estate,
85, Streatham Road, Mitcham
Surrey, CR4 2AP. U.K
Tel: +44 208 640 8228
Fax: +44 208 640 8312

## கடந்த இதழ் தொடர்ச்சி

(125) நாவரட்சிக்கு - இது உமிழ்நீர்ச்சுரப்பி நன்கு வேலை செய்யாத காரணத்தால் ஏற்பட்டிருந்தால் தொடர்ச்சியாக இருக்கும் இதற்கு ஒரு எலுமிச்சம் பழத்தை ஒரு கிளாஸ் நீரில் இரவுமுழுவதும் ஊறவிட்டு காலையில் அந்த எலுமிச்சம்பழத்தை வெட்டிப்பிழிந்து அதே தண்ணீரில் கரைத்து ஒரு கரண்டி தேன்விட்டுக்கலக்கி தினம் சில நாட்கள் குடித்துவந்தால் உமிழ்நீச்சுரப்பி நன்கு வேலை செய்ய ஆரம்பித்து நாவரட்சி குணமாகிவிடும்.

(126) நீராவிக்குளியல் - நீராவிக்குளியல் உடம்பிலுள்ள கெட்ட நீரை போக்கி உடம்பிலுள்ள பலவித சரும நோய்களையும் போக்குவதுடன் உடம்பையும் மெலியச்செய்யும். உடம்பிலுள்ள அத்தனை உறுப்புக்களையும் நல்ல நிலைக்கு கொண்டுவரும் சக்திவாய்ந்தது. எனவே நீராவிக்குளியலை அவ்வப்போது எடுத்துக்கொள்வதால் ஆரோக்கியம் பேணப்படும்.

(127) நீரிழிவு நோய் - அதிக தாகம் எடுத்தால், அடிக்கடி சலம்கழிக்க வருதல், அதிக களைப்பு, உடம்பு எப்படிச்சாப்பிட்டாலும் மெலிதல் ஆகியவை நீரிழிவு நோயின் ஆரம்ப அறிகுறிகளாகும். சாதாரண மனிதருக்கு இரத்தத்தில் சீனியின் அளவு 120 மில்லிக்கிராமாக இருக்கும். இது 170க்கு மேல் இருந்தால் நீரிழிவு கூடுவதைக்குறிக்கும். இதற்கு தகுந்த சிகிச்சை பெறவேண்டும். நெல்லிக்காய் சதையை எடுத்து இடித்துப்பிழிந்து அந்தச்சாற்றில் சிறிதளவு மஞ்சள் தூள் சேர்த்து அத்துடன் சிறிதளவு தேன் விட்டு காலையில் குடித்து வந்தால் நீரிழிவு கட்டுப்படும். மாந்தளிர், மாம்பூ இவற்றை வெய்யிலில் காயவைத்து காய்ந்தபின் இடித்து சூரணம்செய்து வைத்துக்கொண்டு அதில் ஒருகரண்டி தூளை வெந்நீரில் காலையில் குடித்துவந்தால் நீரிழிவு கட்டுப்படும். பச்சைக்காய்கறிகள், கம்பு அரிசிச்சோறு, கேழ்வரகு (குரக்கன்) புட்டு அல்லது உறட்டி, சோழம் இவற்றில் தயாரித்த உணவுகள், தயிர், பால், தோடம்பழம், தக்காளிப்பழம், பப்பாசிப்பழம் அதிகம் சாப்பிடலாம். வெந்தயமும் வெந்தயக்கீரையும் இரத்தத்தில் சீனியைக்குறைக்க வல்லவை. உணவில் இவற்றை அதிகம் சேர்த்தால் நல்லபலன் உண்டு. நாவற்கொட்டையை வெய்யிலில் காயவைத்து இடித்து சூரணம்செய்து அந்தச்சூரணத்தை காலை, மாலை வெந்நீரில் குடித்தால் நீரிழிவு கட்டுப்படும். பொன்னாவரசம்பூ அதன், வேர்ப்பட்டை இவற்றை வெய்யிலில் காயவைத்து இடித்து இந்தச்சூரணத்தை காலை, மாலை வெந்நீரில் குடித்து வந்தால் நீரிழிவு கட்டுப்படும். மாந்தளிரையும் இப்படி செய்து குடித்துவந்தால் நல்லபலன் கிடைக்கும். வாழைத்தண்டின் அடிப்பாகத்தை எடுத்து புளிசேர்க்காது சமைத்து உண்பதும் நீரிழிவைக்கட்டுப்படுத்தும். நித்தியகல்யாணி செடியில் வெள்ளைப்பூக்கள் பூக்கும். அந்த வெள்ளைப்பூக்களை (மஞ்சள் பூக்களுக்கு இந்த குணம் இல்லை) எடுத்து பாலில்போட்டுக்காய்ச்சி குடித்து வந்தால் நீரிழிவுகட்டுப்படும். எந்த மருந்து பாவித்தாலும் போதிய உடற்பயிற்சி, யோகாசனம் செய்தல் அவசியம். தினம் உடற்பயிற்சி, நடைப்பயிற்சி இந்தநோயைக் கட்டுப்படுத்தும். யோகாசனம்



செய்வது சாலச்சிறந்தது. அத்திப்பழத்தை உலர்த்தி சூரணம் செய்து உண்டாலும் நீரிழிவு கட்டுப்படும். எள்ளு, அல்லிவிதை, முருங்கைக்கீரை இவைகள் நீரிழிவைக் கடுப்படுத்த வல்லவை.

(128) நீர்க்கோர்வை தீர - நீர்க்கோர்வை என்பது மூக்கால் தொடர்ந்து நீர் வடிதல். பச்சை வெங்காயத்தை உரித்து அத்துடன் சிறிது மிளகு சேர்த்து அரைத்து விழுங்கி வெந்நீர் குடித்தால் குணமாகும். மஞ்சளை அனலில் காட்டி அந்த புகையை நுகர்ந்தாலும் நீர்க்கோவை குணமாகும்.

(129) நெஞ்சுக்கரிப்பிற்கு - உணவு வயிற்றில் ஜீரணமாகாது பல நேரம் இருப்பதால் நெஞ்சுக்கரிப்பு ஏற்படும். புளிப்பு ஏப்பமும் வயிற்றுப்பொருமலும் இருக்கலாம். இதற்கு ஒரு துண்டு இஞ்சியை அனலில் சுட்டு அந்தக்கரியுடன் ஆறு சொட்டு தேசிப்புளி, ஆறுசொட்டு தேன் விட்டுக்குழைத்து நாக்கில் தடவி வெந்நீர் குடித்தால் குணமாகும். சிறு துண்டு பெருங்காயத்தைச்சுட்டு தேனுடன் சாப்பிட்டாலும் குணமாகும். காரமான உணவுகள், அதிக கொழுப்புள்ள உணவுகள், மதுபானம் சில நாட்கள் தவிர்க்கப் படவேண்டும். இது நீடித்து இருந்தால் வயிற்றில் புண் ஏற்படும் ஆபத்து உண்டு. 'கரற்'ரை வேகவைத்து அரைத்து மோருடன் தினம் பருகினாலும் இது குணமாகும்.

(130) நெஞ்சு வலிக்கு - இது பலகாரணங்களால் ஏற்படலாம். இதன் காரணத்தை கண்டறிந்து சிகிச்சை பெறவேண்டும். இரத்த அமுக்கம், இருதயக்கோளாறாகில் அதற்கு ஏற்ற மருத்துவம் பெறவேண்டும். வலி இல்லாத வேளையில் சுவாசப்பயிற்சி தினமும் செய்து வந்தால் இந்த வலி வராது தடுக்கலாம். வில்வமரப்பட்டையை துவைத்து கசாயம் போட்டு வெல்லத்துடன் காலை, மாலை குடித்தால் இந்த வலிவராது தடுக்கலாம். வலியுடன் வியர்வை, தலைச்சுற்று இருந்தால் உடன் வைத்தியசாலை செல்லவும்

(131)பசிமின் அறிகுறி - எமது உடம்பில் அதிகமான கலன்கள் அழிந்தும் தேய்ந்தும் விடுகின்றன. இந்த 'செல்கள்' என்னும் கலன்கள் உற்பதியாவதற்கு உணவு அத்தியாவசியம். இந்த தேவையை மனத்திற்கு உணர்த்துவதே நரம்பு மண்டலம். இது தேவைப்படும்போது உடம்பிற்சோர்வு, களைப்பு ஏற்படுவதுடன் பசியும் தோன்றும். எனவே உடன் உணவு உட்கொண்டால் அது உடம்பிற்கு தென்பைக்கொடுக்கும்.

(132) தீ சுட்ட புண்ணுக்கு - தீ சுட்டால் அதன்மேல் உடன் நீர் போடக்கூடாது. அப்படிப்போட்டால் அது பொங்கிவிடும். எனவே உடன் அதன்மேல் சுத்தமான தேன் பூசலாம். மதுசாரம் என்னும் ப்றண்டி, சாராயம் பூசினால் உடன் எரிவு குறைந்துவிடும். இவை ஒன்றும் இல்லாவிடில் ஒரு திரிசெய்து அந்த அனலைத் தீ சுட்ட இடத்திற்கு மிக அருகில் சிலவிநாடிகள் பிடித்தால் எரிவு உடன் நீங்கிவிடும். வாழைத்தண்டுச்சாறும் தீ சுட்ட இடம் பொங்காமல் தடுக்கும். இது சிறிய இடத்தில் தீ சுட்டால் செய்யக்கூடிய பரிகாரம். பெருமளவில் தீ சுட்டால் தீவிர சிகிச்சை பெறவேண்டும். அதற்கு வைத்தியசாலையே சிறந்த இடம். அங்கு 'சேலைன்', 'ப்ளஸ்மா' முதலியவை ஏற்றுவதுடன் அதிற்சிக்கும் வைத்தியம் செய்யவேண்டிவரும். நாட்பட்ட தீ சுட்ட புண்களுக்கு அப்பச்சோடாவைக் கரைத்து சுத்தமான துணியில் தோய்த்து காயத்தின்மேல் சுத்தினால் விரைவில் குணமாகும். நாட்பட்ட புண்ணுக்கு தேங்காய் எண்ணையுடன் சுண்ணாம்பு கரைத்து உறைந்தபின் மேலே தெளியும் நீரை எடுத்து அந்த எண்ணையுடன் கலந்து புண்ணில் தடவினால் புண் விரைவில் குணமாகும். மீன் எண்ணையும் அதன்மேல் தடவினால் புண் விரைவில் குணமாகும். கருவேலம் பட்டையை இடித்து தூள்செய்து நல்லெண்ணையில் காய்ச்சி அந்த எண்ணையை பூசினாலும் தீ சுட்ட புண் விரைவில் குணமாகும்.



### பரம்பரை வீட்டு வைத்தியம்


டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D
Holistic Practitioner (canada)
Nutrition & fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை
Tele. - 416.291.3022
E.Mail-DRVPS@Hotmail.com



# AXIS AROGYA PHARMACY

**5200 FINCH AVE. EAST #111, SCARBOROUGH, M1S 4Z4**

NOW OPEN

## AXIS ஆரோக்யா பார்மசி

**Finch & Middlefield சந்திப்பில்**

Tel: 416.840.0007 Fax: 416.840.0008

**உங்கள் அருகாமையில் புதிய மருந்தகம்:** Axis **ஆரோக்யா பார்மசி**
தரமான சேவை தமிழில் சேவை

7 days a week

- நீங்கள் உபயோகிக்கும் மருந்துகள் அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் உங்கள் ஆரோக்கியம் சம்பந்தமான விபரங்கள் பற்றியும் தெளிவான விளக்கங்களை என்னுடன் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் கலந்துரையாடி பெற்றுக்கொள்ளலாம்.
- முதியோர் மற்றும் சமூகநல உதவியில் இருப்போரிடமிருந்து $2.00 அறவிடப்படமாட்டாது.
- தங்களுக்குத் தேவையாயின் இலவச விநியோகமும் செய்து தருவோம்.
- மருந்தகத்தின் இரத்த அழுத்தம் சரிபார்க்கும் கருவியையும் இலவசமாக உபயோகிக்கலாம். (Free Blood pressure Monitoring )
- Glucometer Strips வாங்கினால் Glucometer இலவசமாக தருவோம். அத்துடன் உபயோகிக்கும் விதத்தினையும் தெளிவாக விளக்கிக் கூறுவோம்.

*DRAW FOR A FREE * FULLY AUTOMATIC BLOOD PRESSURE MONITOR*
குலுக்கல் முறையில் இரத்த அழுத்தம் பரிசோதிக்கும் கருவி இலவசம்*
* No purchase necessary.
Valid only at Axis Arogya Pharmacy
மேலதிக விவரங்களுக்கு அழைக்கவும்

•மருந்தக நேரம் முழுவதும் தமிழ் மருந்தாளரின் சேவைகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள் வெ. கார்த்திகேயன் (கார்த்திக்) மருந்தாளர் (Pharmacist/Owner)



*விரைவான சேவை! நிறைவான சேவை!! தரமான சேவை!!!*

**உங்கள் ஆரோக்கியமே எங்கள் நோக்கம்**



# MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# பாலுமகேந்திராவைக் கவர்ந்த கவிஞர்!



கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன் புதிதாக எழுதி வரும் காவியத்தை இயக்குநர் பாலுமகேந்திரா திரைப்படமாக இயக்குகிறார் என வெளியானச் செய்தியை மறுத்துள்ளார் இயக்குநர் பாலுமகேந்திரா. தமிழீழப் போராட்டம் தொடர்பாக வ.ஐ.ச. ஜெயபாலன் எழுதிய காவியத்தை திரைப்படமாக பாலுமகேந்திரா எடுக்க இருப்பதாகவும், அதற்கான கதை விவாதம் நடந்து கொண்டிருப்பதாகவும் செய்திகள் வெளியாகின. நெருப்பில்லாமல் புகையுமா என்பதுபோல், இந்த நேரத்தில் நோர்வேயில் வசித்துவரும் கவிஞர் ஜெயபாலனும் இந்தியா வந்து நீண்டகாலமாகத் தங்கியிருக்க, செய்தி நான்கு பக்கமும் காட்டுத் தீ மாதிரி பரவத் தொடங்கியது. இப்போது, “இது தவறான செய்தி. அப்படி எந்தத் திட்டமும் தனக்கு இல்லை” என பாலுமகேந்திரா மறுத்துள்ளார். “வ.ஐ.ச.ஜெயபாலனின் “ஈழத்து மண்ணும் எங்கள் முகங்களும்” எனக்கு மிகவும் பிடித்த படைப்பு. ஜெயபாலனின் சமூக அரசியல் சார்ந்த கட்டுரைகளையும் நான் படித்துள்ளேன். நான் வாழும் காலத்திலேயே வாழும், என் சமகால படைப்பாளிகளில் நான் மிகவும் மதிப்பவர்களில் அவரும் ஒருவர். ஆனால், அவரது படைப்புகளை திரைப்படமாக எடுக்கும் திட்டம் எனக்கு இல்லை. அதற்கான வேலைகள் எதுவும் நடக்கவுமில்லை” என அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் பாலுமகேந்திரா.

# மாறுகிறார் “பெரியார்”



“பெரியார்” திரைப்படத்தின் படப்பிடிப்பு பணிகள் முற்றிலுமாக முடிந்துவிட்ட நிலையில், தி.மு.க. தலைவரும் தமிழக முதல்வருமான கருணாநிதிக்கு திரைப்படம் திருப்தி தராததால் மீண்டும் படப்பிடிப்புக்குச் சென்றுள்ளனர் “பெரியார்” படக்குழுவினர்.” பெரியாரின் வாழ்க்கையை அப்படியே தத்ரூபமாக சித்திரிக்க, மிகப்பெரிய ஆராய்ச்சிகள் செய்து, அதனடிப்படையில் படமாக்கி வருகிறார் ஐ.ஏ.எஸ். அதிகாரியும் இயக்குநருமான ஞான ராஜசேகரன். முடிந்துவிட்ட மொத்தப் படத்தையும் பார்த்த முதல்வர் பல இடங்கள் தத்ரூபமாக இல்லை எனவும் அக்காலகட்டம் குறித்த அவரது நினைவுகளையும் இயக்குநருடன் பகிர்ந்து கொண்டாராம். இதனடிப்படையில் மறுபடியும் பல இடங்களை மாற்றி பதிவுசெய்ய திட்டமிட்டுப் புறப்பட்டுவிட்டது “பெரியார்” படை.” என்கிறார் “பெரி யார்” மக்கள் நலப் பணியாளர். ஆனால், “பெரியாரின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்ட பல அரசியல் தலைவர்கள் மிக முக்கியமான அதிகாரத்தில் இருக்கும் நிலையில் அவர்கள் மனச்சங்கடத்துக்கு ஆளானால் தேவையில்லாத சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும் என மிகக் கவனமாக செயல்படுகிறார் ராஜசேகரன். அதற்காகத்தான் மாற்றங்கள்... தத்ரூபமாக எடுக்கப்போகிறார்களா அல்லது யார் மனதையாவது குளிர்விக்க கதையை மாற்றப் போகிறார்களா என்பது படம் வெளியான பிறகுதான் தெரியும்” என்கிறார்கள் இன்னொரு தரப்பினர்.

# நயன்தாரா தற்கொலை முயற்சி!

காவிரி, முல்லைப் பெரியாறு என அடிப்படை வாழ்வாதாரப் பிரச்னைகள் சுற்றி நின்று பயமுறுத்தினாலும், சென்றவார தமிழ்நாட்டு மக்களின் “ஹாட் டாபிக்” நடிகை நயன்தாரா தற்கொலை முயற்சிதான்.” சிம்பு - நயன்தாராவின் நெருக்கமான முத்தக்காட்சிகள் பத்திரிகைகளில் வெளியானதால் மனமுடைந்து நயன்தாரா தற்கொலைக்கு முயன்றுள்ளார். சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்” என யாரோ கொழுத்திப்போட்ட வதந்தி, காட்டுத் தீயாகப் பரவ துடிதுடித்துப் போனார்கள் தமிழக மக்கள். பிறகு, அந்தத் தகவல் உண்மையல்ல எனத் தெரிந்த பிறகு இயல்புக்குத் திரும்பினாலும் இரண்டு தினங்கள் அதுபற்றிய பேச்சு கிசுகிசுப்பாய் சுற்றியது. “இனிமேல் சிம்புவுக்கும் எனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை” என நயன்தாரா சொன்னாலும், சிம்பு விடுவதாய் இல்லை. “அப்படங்கள் வெளியானதுக்கு நீங்கள்தான்



காரணம் எனச் சொல்லப்படுகிறதே” எனப் பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு, “ஆமாம். அதுக்கென்ன” எனத் தெனாவெட்டாகப் பதில் சொன்னாராம் சிம்பு. இதனால், மேலும் பல படங்கள் அவரிடம் இருக்கக்கூடும். அவற்றை வைத்து பிளாக்மெயில் செய்வாரோ என ஏகப் பயத்தில் இருக்கிறார்களாம் நயன்தாரா தரப்பில்.

**பிலிம்நியூஸ் கிருஷ்ணன்**


SAFETY TRUCKS

Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (13 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

20 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்

***905-793-9546 / 416-616-5979***

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3



EXPERT BUILDING INSPECTIONS LTD

"Dedicated to Expert, Honest & Independent Inspections"

**Tel: 905 940 0811 Fax 905 940 6108**

**Toll Free 1 866 373 3315**

- Commercial Building Inspections
- Environmental Assessments
- Air Quality Investigations
- Problem Analysis & Solutions
- New Home Warranty Inspections
- Resale Home Inspections
- Complete Home Audit
- Thermal Imaging

**www.expertinspector.com**

- Tough and Thorough Inspections by **University of Toronto** educated Building Science Experts Specializing in Defect Recognition
- Our Inspectors are Registered Home Inspectors under the Province of Ontario 1994 Home Inspectors Act-Bill 158 and full members of **ASHI** and **CAHPI**-Ontario
- Exceed Nationally Recognized Standards
- Important Maintenance Advice & Follow Up Support For First Time Buyers
- On-Site Narrative Reports
- Seven Days a Week

ASHI MEMBER

CAHPI Ontario

# சுசீந்திரம் - கல்லும் சொல்லாதோ கவி



## தமிழ்நாடு சுற்றுலாத்தலங்கள்-11

“திப் பிரானும் அணிமணி வண்ணனும்
திக் கமலத்து அலர்மிசை யானுஞ்
சோதிக்கல் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனர்
பேதித்து உலகம் பிணங்குகின்றார்களே!”

- திருமூலரின் திருமந்திரத்தில் வரும் பாடல் வரிகள் இவை. படைத்தல், காத்தல், அழித்தல் இம்முத்தொழிலுக்கும் உரிய பிரம்மன், திருமால், சிவன் மூன்று கடவுளர்களும் ஒன்றே என்கிறார் திருமூலர். இந்த சமரச ஞானத்தை மக்கள் மனத்தில் பதியுமாறு கல்லிலும் செம்பிலும் பொறித்த பெருமை உள்ள சிற்றூர் சுசீந்திரம். நாகர்கோவிலில் இருந்து கன்னியாகுமரி செல்லும் வழியில், தென்தமிழகத்தின் தென்கோடியில் இருக்கிறது இந்த ஊர். நாற்புறமும் பசுமையான நஞ்சை வயல்கள் சூழ, நடுவே விண்ணைத் தழுவும் கோபுரம்... மாணிக்க ஒளி கதிர்விடுவது போன்ற இயற்கை எழில் தோற்றத்தை சுசீந்திரத்திற்கு தருகிறது. கன்னியாகுமரிக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் தவறாமல் பார்க்க வேண்டிய இடம் சுசீந்திரம்.

“கல்லும் சொல்லாதோ கவி” என்னும் வரிக்கு மிகப் பொருத்தமான எடுத்துக்காட்டு சுசீந்திரம் தாணுமலையப் பெருமாள் திருக்கோவில். கிழக்குத் திசை நோக்கி அமைந்துள்ளது இந்த ஆலயம். இங்குள்ள சிற்பங்கள் கதை பேசும் செண்பகராமன் மண்டபம், திருக்கல்யாணம் நடைபெறும் ஊஞ்சல் மண்டபம், வேனிற்காலத்தில் மூலவர் இளைப்பாறும் வசந்த மண்டபம், அலங்கார மண்டபம், சித்திர சபை ஆகியவை பார்க்க வேண்டிய சிறப்பும் கலையழகும் கொண்டவை. 134 அடி நீளம், 233 அடி அகலமுள்ள இப்பெருங்கோயிலின் 134 அடி உயரக் கோபுரம் ஏழு நிலைகள் கொண்டது. பிரம்மன், திருமால், சிவன் மூவரும் முழு முதற் கடவுளின் முக்கண்களாய் அமைவார்கள் என்று உலகனைத்துக்கும் ஒலி பரப்பும் உயர்வுடையது இக்கோபுரம். தாணுமலையன் என்பதில் உள்ள தாணு என்ற சொல் சிவனையும், மாலை என்பது திருமாலையும், அயன் என்பது பிரம்மனையும் குறிக்கிறது. கோபுரத்தின் உட்சுவர்களில் புராணப் படங்கள் தீட்டப்பட்டுள்ளன. கூரையின் மேற்குக் கோடியில், கதவுக்கருகில் லட்சுமி, சரஸ்வதி, பார்வதி மூன்று தேவிகளின் உருவச்சிலைகள்



உள்ளது. பத்மாசனத்தில் வீற்றிருப்பது போல முத்தேவியரும் குழந்தையாக மாறிவிட்ட தங்கள் கணவன்மார் பழைய உருப்பெறத் தவம் செய்வதாக ஐதீகம்.

இக்கோபுர வாசலின் இரு கதவுகளும் 24 அடி உயரமுடையவை, சித்திர வேலைப்பாடுகள் கொண்டவை. இக்கோவிலின் தாணுமலையப் பெருமாள் லிங்கமும் நல்ல வேலைப்பாடுகள் உடையது. இவருக்கு செய்யப்படும் எண்ணெய் அபிசேகம் பூமிக்குள் சென்று கன்னியாகுமரி தீர்த்தத்தில் கலப்பதாக ஐதீகம். கர்ப்பகிரகத்தில் விஷ்ணுமூர்த்தி நின்ற திருக்கோலமாகக் காட்சியளிக்கிறார். கர்ப்பகிரகத்துக்கு முன்னால் அர்த்தமண்டபமும் அதற்கும் முன்னால் மகா மண்டபமும் உள்ளன. இம்மண்டபங்களில் பல அரிய சிற்பங்களும் இசைத் தூண்களும் கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. கோயில் மூர்த்திகள் அழகு பொருந்திய திருவுருவங்களாக உள்ளார்கள். கோயிலின் பிரகாரத்தில் உள்ள மிகப் பிரமாண்டமான ஆஞ்சநேயர் சிலை, வழுவழுப்பான கருங்கல்லில் காண்போரைக் கவர்ந்திழுக்கும்.

அம்மன் சன்னிதானத்தில் நான்கு புறங்களிலும் பல அழகான வேலைப்பாடுகள் கொண்ட 24 கல் தூண்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு தூணும் ஒரு கதை, ஒரு கவிதை. அவ்வளவு நாகாசு வேலைகளும் அருமையான சிற்பங்களும் உள்ளன. மேலும், இந்தத் தூண்களின் அருகில் காதை வைத்துக்கொண்டு, ஒரு தட்டு தட்டினால் பல நாதங்கள் எழும்பும். ஒன்றில் வீணையின் நாதம், மற்றொன்றில் மிருதங்க நாதம், இன்னொன்றில் ஜலதரங்கம் வாசிக்கப்படுவதைப் போலக் கேட்கிறது. உலகிலேயே இது மிக மிக அபூர்வம் என்கிறார்கள், உலகின் பல பகுதிகளுக்கும் பயணம் செய்துள்ளவர்கள்.



## வழிப்போக்கன்

இந்த ஜால வித்தைகளைச் செய்த சிற்பிகள் யார் எனத் தெரியாமல் போனது வரலாற்றுத் துரதிஷ்டம்.

சமய சமரச ஞானத்துக்கு ஒப்பற்ற இலக்கணமாக இருப்பது போலவே சரித்திர சமரச உணர்வுக்கும் உறைவிடமாய் இருக்கிறது இறைவனின் இந்த திருப்பதி. இக்கோயிலின் வரலாறு ஏழாவது நூற்றாண்டிலேயே தொடங்குகிறது என்கிறார்கள். கோயிலின் உள்ளே இருக்கும் கொன்றை மரம் 2300 ஆண்டுகள் பழமையானது. இதுவே இக்கோவில் எவ்வளவு புராதனமானது என்பதை நமக்குப் புலப்படுத்தும். அகலிகையை, இந்திரன் ஏமாற்றி அவள் கற்பைச் சூறையாடியதால் ஏற்பட்ட சாபத்தை நீக்கிக்கொள்ள இங்கே தவம் புரிந்து பாவம் நீங்கி நன்மை எய்தினான் என்பது இந்த ஊரின் ஸ்தல புராணம். சுசி இந்திரம் ஸ்ரீ சுசீந்திரம். அதாவது, இந்திரன் சாபம் நீங்கி சுசியான இடம் என்று பொருள். இங்குள்ள நந்தியையும் விக்னேஸ்வரரையும் ஒருங்கே இந்திரன் தியானித்து வழிபட்டதால் இந்த விநாயகருக்கு இந்திர விநாயகர் என்று பெயர். இவ்விநாயகப் பெருமான் முன் நந்திதேவரையும் பார்க்கலாம். இதுமாதிரி வேறு எந்தக் கோவிலிலும் பார்க்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

கோவில் தவிர மற்றும் பல சிறப்புகளும் இந்த ஊரில் உண்டு. அவற்றுள் முக்கியமான ஒன்று, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பிறந்து வளர்ந்த ஊர் இது என்பது. கவிமணி, தாணு மலையப் பெருமாளைக் குறித்து அநேகப் பாடல்களைப் பாடியுள்ளார். சங்ககால ப∴றுளி ஆற்றை நினைவுபடுத்தும் பழையாறு இந்த சிற்றூரை ஒட்டியோடி கன்னியாகுமரி அருகே கடலில் கலக்கிறது.

வற்றாத சிற்றாறு, எழில் கொஞ்சும் பசுமை வயல்கள், சில்லென்ற காற்று... ஆன்மீக பயணத்துக்கும் கண்களுக்கு விருந்து படைக்கும் சுற்றுலாவுக்கும் என இரு சிறப்புகள் கொண்ட சிற்றூர் சுசீந்திரம்.

## எப்படி செல்வது?

நாகர்கோவிலில் இருந்து 6 கி.மீ. தொலைவிலும், கன்னியாகுமரியில் இருந்து 13 கி.மீ. தொலைவிலும் இருக்கிறது சுசீந்திரம். இந்த இரண்டு நகரங்களுக்கும் இடையே நிமிடத்துக்கு ஒரு பேருந்து சுசீந்திரம் வழியாக ஓடுகிறது. இக்கோவிலில் மார்கழி மாதம் நடைபெறும் திருவிழாவும் அப்போது நடைபெறும் தேரோட்டமும் தெப்பமும் தனிச் சிறப்பு வாய்ந்தவை. எனவே, இக்காலகட்டத்தில் இவ்வூருக்குச் சென்றால் கூடுதல் விருந்தும் கொண்டாட்டமும் உண்டு. முக்கடலும் சங்கமிக்கும் கன்னியாகுமரி, சூரியோதயத்திற்கும் சூரிய அஸ்தமனத்திற்கும் சிறப்பு வாய்ந்தது என்பதால் கன்னியாகுமரியில் தங்குவது சிறந்தது.


SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL
Excellent Quality - Low Cost Training
Truck licence A-Z
From $599.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book
• A-Z & D-Z up grade • One on One Training
• Job Placement Right Away!
• உடனடி வேலை வாய்ப்புக்கள்
• வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake
Fork Lift licence
From $75.00
சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்: Pl. Call: Raja / Shan
416.913.9574 / 416.829.0603
40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

164

நகைச்சுவைத் தொடர்

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



தொட்டிலும் ஆட்டி பிள்ளையும் கிள்ளுவார்
போருக்கு கப்பல் வந்தது ஒரு காலம்
போர்க்கப்பல் மட்டும் இப்போ தானம்

ஒரு நாட்டில் அரிசி கடத்தல் கள்ளக்கடத்தல் சந்தனக்கட்டை கடத்தல்
ஆனால் இப்போ காலம் மாறப்போச்சு

நாடாளுமன்றத்தில் பட்டப்பகலில் செங்கோல் எடுத்துக்கொண்டு எதிர்க்கட்சியினர் ஓடினவையாம் என்றா செக்கண்ட் புளோர் செல்லம்மா

செங்கோல்தானே, எமது அரசிடம் அது இல்லைத்தானே? அதனை வைத்து என்ன செய்யப்போகிறார்கள் என நினைத்து எடுத்துக்கொண்டு ஓடினார்களோ? என்னவோ என்று சொல்லிச்சிரிச்சா ஆட்டிலறி அன்னம்மா. இன்று பலருக்கு நகைச்சுவை தேவையில்லை. உலகில் நடக்கும் அரசியலே நகைச்சுவையாகத்தான் இருக்கிறது. இலங்கைப்பிரச்சினையைப் பேசித்தீர்க்க வேண்டுமென்று ஆலோசனை வழங்கும் ஜனாதிபதி ஜோர்ஜ் புஸ் ஈராக்கைப் பொறுத்தமட்டில் இராணுவ நடவடிக்கையே சரியானதென்று முடிவாக, வடிவாகக்கூறியுள்ளார்.

சில நேரங்களில் சில மனிதர்கள்



உலகர் பலபிரச்சினைகளைத் தலைக்குள்போட்டு உடைத்துக்கொண்டிருந்தார். பெற்றோல் விற்பனை நிலையங்களில் 80 90 என விலைகள் போட்டிருந்த காலம் போய் 000 என விலை விழுந்திருந்தது. ரூபன் காரை நிப்பாட்டியபோது தான் தெரியும் (பெற்றேல்) எரிபொருள் முடிந்துவிட்டதென்று. எந்த நாட்டில் இருக்கிறோம்?.

மறைந்த ஜனாதிபதி றொனால்ட் றீகன் ஈரானுடன் போர்தொடுத்த நாளிலிருந்து ஈராக்குடன் ஜோர்ஜ் புஸ் தொடுத்த சண்டையே உந்த மண்ணாப்போன மன்னிக்கவும் உந்த மண்ணுக்கு கீழுள்ள எண்ணைக்காகத்தானே ?..
வெகுவிரைவில் தீர்ந்துவிடுமா? சண்டையல்ல, எண்ணை?

மண் பறித்துண்ணேல்.. (ஆத்திசூடி)
மற்றவரது நிலத்தை அபகரித்து அதையுண்டு வாழக்கூடாது..
என ஔவையார் எத்தனையோ ஆண்டுகளுக்கு முதல் சொல்லிவைத்தார்.

வெகுவிரைவில் தீர்ந்துவிடுமா? சண்டையல்ல எண்ணை?

அன்னம்மாக்கா, இந்தியா இலங்கைக்கு போர்க்கப்பல் அன்பளிப்பு செய்யினமாம் என்றதும் உலகரும் ஆட்டிலறி அன்னம்மாவும் ஒரே தரத்தில் செல்லம்மா பக்கம் திரும்பினர். போருக்குக் கப்பல் வந்த காலம் போய் இப்ப போர்க்கப்பல் அன்பளிப்பு செய்யினம்.

தொட்டிலும் ஆட்டி பிள்ளையையும் கிள்ளிவிடுறது அந்தக்காலம் தொட்டில் ஆட்டாமலே பிள்ளையைக்கிள்ளிவிடுறது இந்தக்காலம்.

---

மிருதங்க சேஷ்திர தாபகர்
மிருதங்க ஞானவாருதி திரு. வாசுதேவன் இராஜலிங்கம் அவர்களின் மாணவனும்

உருத்திரா - வாணி தம்பதிகளின் புதல்வனும்
கவிஞர் வி. கந்தவனம் - தவமணி தம்பதிகளின் பேரனுமாகிய

## செல்வன் கிருஷ்ணாவின்
## மிருதங்க அரங்கேற்றம்

காலம் : மார்ச் 11, 2007 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி
இடம் : புனித பீற்றர் - போல் மண்டபம்
231 மில்னர் அவென்யு, ஸ்காபரோ, ஒன்ராறியோ

நிகழ்ச்சி உரிய நேரத்துக்குத் தொடங்கப்பெறும்.






# உடை உணர்வு

## ஓடும் நீர் உறைவதில்லை 31

நமது வாழ்வின் வெற்றிகளுக்குப் பல்வேறு காரணிகள் அடிப்படையாகின்றன. இந்த அடிப்படைகளில் மிகச் சில எல்லோருக்கும் பொதுவானவையாகவும் வேறுசில ஒவ்வொரு நபருக்கும் ஏற்றவாறு சிறப்புத்தன்மை கொண்டதாகவும், ஏனையவை ஒவ்வொருவரதும் எதிர்பார்ப்புகளுக்கேற்ப ஏற்கப்படுபவையாகவும் மறுக்கப்படுபவையாக வும் அமைகின்றன. மனிதனாகப் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் வெற்றியடையவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் வேறுபாடான கருத்துக்கள் இருப்பதில்லை. மாறாக வெற்றியீட்டப்பட வேண்டிய விடயம் தான் ஆளுக்காள் வேறுபட்டதாக அமைகின்றது.

வாழ்க்கையில் ஒருவிடயத்தில் வெற்றியடைவதற்கு அடிப்படையில் அவசியமானது என்ன என்பது தான் பலருக்குக் குழப்பமாக இருக்கிறது. சிலர் கல்விதான் அடிப்படை எனக்கருதி அதில் கரைகண்ட பின்னரும் எதிர்பார்த்த வெற்றியை அடையமுடியாது மலைத்துப்போய் நிற்கிறார்கள். வேறுசிலர் கடின உழைப்புத்தான் அடிப்படை என்று எண்ணி நாளாந்தம் உணவிலும் உறக்கத்திலும் கவனம் செலுத்தாது உடல் நலத்தைப்பரிசாகக் கொடுத்து ஏமாந்து அழுகிறார்கள். இன்னும் சிலர் எதுவாக இருக்கும் என்று ஆராய்வதிலேயே காலத்தை கழித்துக் கொண்டிருக்கிறார்கள். மிகுதியில் பெரும்பாலானவர்கள் கால வெள்ளத்தில் கரைபட்டு காணமற் போய்விடுகிறார்கள். மிகக் குறுகிய அளவிலானவர்கள் மட்டுமே இந்த உண்மையை அறிந்து அதனைத் தமது வாழ்க்கையில் கைக்கொண்டு வெற்றியாளர்கள் ஆகிறார்கள். அதுமட்டு மன்றி மற்றவர்களுக்கான முன்னோடிகளாக வும் அமைந்து விடுகிறார்கள்.

வெற்றியாளர்கள் என வகைப்படுத்தப்படுபவர்கள் எல்லோரும் சாதாரண மனிதர்கள் தான். பிறப்பின் அடிப்படையில் மற்றவர்களைவிட எந்த விதத்திலும் வேறுபட்டவர்கள் அல்ல. ஒரு குழந்தை பிறந்தவுடன் இது அறிவு கூடிய குழந்தையாகப் பிறந்துள்ளது என்றோ அல்லது அறிவு குறைந்த குழந்தையாகப் பிறந்துள்ளது என்றோ அடையாளம் காணப்படுவதில்லை. சில குழந்தைகள் உடல் குன்றியவர்களாகப் பிறந்தாலும் அதன் உள்ளத்தை நாம் வளம் குறைந்ததாகக் என்று கருதுவதில்லை. ஆகவே பிறப்புத்தான் ஒருவரை வெற்றியாளனாக்குகின்றது என்பதோ அல்லது வெற்றியாளனல்லாதவனாக்குகிறது என்பதோ மகா தவறு.

சில சந்தர்ப்பங்களில் ஒருவரது வெற்றிக்கு பூர்வ புண்ணியப் பலன்கள் தான் காரணம் என்று கூறுவதையும் கேள்விப்படுகிறோம். ஆன்மீக அடிப்படையில் எதிர்பார்க்கப்படும் வெற்றி என்பது பௌதீக அடிப்படையிலான வெற்றிகள் அல்ல என்பதை நாம் மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். சோதனைக்கு மேல் சோதனை வந்தாலும் சாதனைக்கு மேல் சாதனை படைப்பதெல்லாம் உளவியல், பொருளியல் சார்ந்த வெற்றிகளேயன்றி ஆன்மீகம் சார்ந்ததல்ல. ஏனெனில் ஆன்மீக வெற்றியென்பது புறக்காரணிகளால் தீர்மானிக்கப்படுவதுமல்ல, மற்றவர்களால் அடையாளம் காணப்படுவதுமல்ல. அதன் தன்மை, அதன் அளவு, அதன் அனுபவம் என்பன அவரவரால் மட்டுமே உணரப்படுகின்றது. அதுமட்டுமன்றி ஒருவரது ஆன்மீக வெற்றியை விடமற்றவர்கள் அதிகமான அல்லது குறைவான வெற்றியை அடைந்துள்ளார்களா என்று யார் எதை அடிப்படையாக வைத்து அளவிடமுடியும்? எனவே இங்கு நான் கூறும் வெற்றியென்பது ஆன்மீக வெற்றியை உள்ளடக்காத ஏனையவை என்பது கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

ஒருவரை வாழ்க்கையில் வெற்றியாளர் என்று நாம் கூறும்போது ஏதோ ஒருவிடயத்தை அல்லது பல விடயங்களை ஒப்பீடு செய்துதான் கூறுகிறோம். இந்த விடயங்கள் ஒரு சிலருக்கு மட்டும் உரித்தானவையா அல்லது எல்லோருக்கும் பொதுவானவையா என்பது தான் முதலில் அறியப்பட வேண்டியது. உலகவரலாற்றை உன்னிப்பாகப் பார்த்தால் வெற்றியாளர்கள் என வகைப்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்புக்கள் அனைத்தும் எல்லோருக்கும் பொதுவாக ஏற்றத்தாழ்வின்றி வழங்கப்பட்டிருக்கின்றன என்ற உண்மையை நாம் மறுப்பின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படியாயின் எல்லோரும் வெற்றியாளர்களாக முடியவில்லையே ஏன்?

ஒருவரது வெற்றியும் தோல்வியும் அவரது தெரிவுகளின் பெறுபேறுகளாக அமைவதும், அத்தெரிவுகளின் தன்மை அவரவர் மனோபாவ அடிப்படையில் அளவிடப்படுவதும், அவரவரது மனோபாவம் அவரவரது சிந்தனை, செயல் என்பவற்றால் வெளிப்படுத்தப்படுவதும், இந்த வெளிப்பாடுகள் ஒருவர் தன்னைப் பற்றிய பார்வையில் (Self-Image) இருந்து உருவாக்கப்படுவதும் அடிப்படைகளாகின்றன என்பது தான் உண்மை.

இங்கே ஒருவரை வெற்றியாளர் ஆக்குவதும், ஆக்காமல் இருப்பதும் மற்றவர்களால் தீர்மானிக்கப்படுவதல்ல என்பது மிகத் தெளிவாக இருப்பதால் வெற்றியும் தோல்வியும் எம்மைப்பற்றிய எமது பார்வை - சுய பார்வை (Self-Image)யாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது என்பது மறைக்கவோ அல்லது மறுக்கவோ முடியாத உண்மை. எனவே ஒருவரது சுயபார்வையானது உயர்வானதாக அமையும் போது அவரது சிந்தனை, செயல் என்பன உயர்வானதாகவும், தாழ்வாக இருக்கும்போது எதிர்மாறானதாயும் அமைவதை நாம் அனுபவரீதியாக அறிகின்றோம்.



ஒருவரது சுயபார்வையைத் தீர்மானிப்பதில் பலகாரணிகள் தொடர்பு பட்டிருக்கலாம். இருப்பினும் பெரும்பாலான காரணிகள் புறக்காரணிகளாக அமைவதுதான் அவதானிக்கப்பட வேண்டியது. இந்தப் புறக்காரணிகளின் ஆணிவேராக அமைவது அவரது வெளித்தோற்றம். இந்த வெளித்தோற்றத்தின் அத்திவாரமாக அமைவது ஒருவரது உடை. ஒருவர் அணியும் உடை அவரது சுயபார்வையை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துகின்றது என்ற அடிப்படை உண்மையை நாம் தெளிவாக உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இதனால் தான் ஒருவரது இயல்பை மிகத் தெளிவாக வரையறுப்பதற்கு “ஆள்பாதி ஆடைபாதி” என்று கூறுவது வழக்கம்.

ஒருவரது உடையை நாம் அவதானிப்பதன் மூலம் அவர்பற்றிய ஒருகணிப்பீட்டை நாம் உருவாக்கிக் கொள்வது வழக்கம். ஒருவர் அணிந்திருக்கும் உடுப்பின் தன்மையைப் பொறுத்து அவரது சொந்தப்பார்வையும் அமைவது இயல்பு. உயர்வான மற்றவர்களது பார்வைக்குத் தரமான முறையில் நாம் உடைகளை அணியும் பொழுது எமக்கே எம்மைப்பற்றிய உயர்வான பார்வை ஒன்று இயல்பாகவே எழுவதைக் காணலாம். இந்தப்பார்வைதான் ஒருவரது முன்னேற்றத்திற்கான முதற் படியாகவும் அமைகின்றது.

துரதிஷ்டவசமாக பலர் உடைக்கும் உணர்வுக்கும் இடையிலான தொடர்பை உணர்ந்து கொள்வதில்லை. ஒருவரது உணர்வில் உடையினது செல்வாக்கு எவ்வளவு தூரம் இடம்பெறுகின்றது என்பது நாம் ஒவ்வொருவரும் அறிந்து கொள்ளவேண்டிய விடயம். ஒருவரது உடையில் ஏற்படும் மாற்றம் அவரது உணர்விலும் மாற்றத்தைக் கொண்டுவருவதால் தான் சமூக நலனுக்காகச் சேவை செய்யும் ஒருமனிதன், மனித உயிர்களுக்கு மதிப்பளிக்கும் அந்த மனிதன் போர்க்காலத்தில் உடை (இராணுவ உடை) மாறுகின்றபோது உணர்வும் மாறி அவனது செயற்பாடுகளும் மாறுகின்றன. இதனால்தான் ஒரு மனிதனது உணர்வில் என்னவகையான மாற்றங்கள் தேவைப்படுகிறதோ அதற்கேற்றவாறு உடைகள் தெரிவு செய்யப்படுவதை அவதானிக்கலாம்.

ஆம் வாசகர்களே!

ஒருவரது உடை அவரது உணர்வின் அடிப்படையாக அமைவதும், அந்த உணர்வின் மூலம் அவர் தன்னைப்பற்றிய பார்வையை நிர்ணயிப்பதும் இரண்டறக்கலந்திருப்பதால் தரமான வாழ்க்கை முறைக்கு மட்டுமல்ல வெற்றி மனோபாவத்தைக் கட்டி யெழுப்புவதற்கும் உடை அடிப்படையாகின்றது. சமூக பொருளாதார அடிப்படையில் எந்த நிலையில் நாம் இருந்தாலும் எம்மைப்பற்றிய உயர்வான பார்வையே அடுத்தபடிக்கு நம்மை இட்டுச் செல்லக்கூடியது. இந்த உயர்வான சுயபார்வை (High Self-Image) க்கு உடையும் உடை சார்ந்த உணர்வுமே அடிப்படையாதலால் வெற்றி மனோபாவத்தை வெளிப்படுத்தும் வகையில் எமது உடைகளை அணிந்து உதாரணபுருசர்களாக இவ்வுலகில் வலம் வருவோம்.

KG Master
416.725.5112





கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை

Education = Intelligence + Character

KG Master
(Over 25 years of experience)
(416) 291-2611
(416) 725-5112

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 7 to 16 years old

*Self-Confidence, Self-Image*
*Self-Discipline, Patience*
*Obedience, Positive Thinking*
*Winning Attitude,*
*Taking Responsibility*
*Leadership Qualities*



# ஆஸ்துமா எப்படி வருகிறது

## Asthma

ஆஸ்துமா நோய் என்பது என்ன? எப்படி வருகிறது? ஆண்கள், பெண்கள் குழந்தைகள் இவர்களுக்கு ஆஸ்துமா நோய் எப்படி வருகிறது? அதை நிவர்த்தி செய்ய இயற்கை மருத்துவ முறைகள் என்ன? உணவுக் கட்டுப்பாடுகள் என்ன என்பதை இக்கட்டுரையில் பார்ப்போம்.

ஆஸ்துமா என்றால் என்ன? (Asthma)

நமது நுரையீரலின் (Lungs) வெளிச்சுவரின் காற்று செல்லக்கூடிய நுண்துளைகள் ஏராளமாக உள்ளன. இவற்றின்மேல் சளி அடைத்துக்கொள்ளும் போது நுரையீரல் விரிந்து சுருங்கும் தன்மை குறைந்து உள்ளே செல்லும் காற்று மிகவும் குறைவாகவே செல்கிறது. இதனால் Lungs சரிவர வேலை செய்ய முடியாமல் சிரமப்படுகிறது. இந்த நிலையில் உள்ளே செல்லும் பிராணவாயுவின் அளவு குறைகிறது. இதனால் இரத்த சுத்திகரிப்பும் இரத்த ஓட்டமும் சீர்குலைகிறது. இதைத் தொடர்ந்து உடலில் சோர்வு ஏற்பட்டு மூச்சு விரிவதிலும் மூச்சு எடுப்பதிலும் மிகவும் சிரமம் ஏற்படுகிறது. இதனால் நோயாளிகள் துன்பப்பட வேண்டியுள்ளது.

இந்த நோயானது அதிக தூசுகள் நிறைந்த இடத்தில் வேலை செய்பவர்களுக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. அதேபோல் குழந்தைகளுக்கு பிறவியிலேயே ஏற்படும் பட்சத்தில் அவர்களுக்கு இந்த நோயிலிருந்து பூரணமாக குணம் ஏற்பட இறைவன் கொடுத்த இயற்கையான இணையற்ற மருந்தான தாய்ப்பாலினைக் குழந்தை பிறந்தது முதல் இரண்டு வயது வரை தொடர்ந்து கொடுத்து வந்தால் நிரந்தரமாக நோயிலிருந்து விடுபட வாய்ப்புண்டு. இதற்கும் பலனளிக்காது போனால் குழந்தை தாய்ப்பால் குடிக்கும் காலத்திலிலேயே நோய்குரிய பிற சிகிச்சைகளைச் செய்தால் நிரந்தர தீர்வு



கிடைக்கும்.

மது அருந்தும் பழக்கத்தினாலும் புகைபிடிப்பதாலும் ஆஸ்துமா வர வாய்ப்புண்டு. அதிக குளிரில் நீண்டநேரம் நிற்பதால் மிகக் குளிரான காற்று சுவாசப்பைகளில் உள்நுழைவதால் இந்நோய் வருவதற்கு சந்தர்ப்பமுள்ளது.

ஆஸ்துமா நோயாளிகளின் உணவுக் கட்டுப்பாடுகள்

1. மதுபானம், புகைபிடிப்பது போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.
2. ஆண்கள் மீசை வளர்த்துக் கொள்ளவேண்டும். அப்படி மீசை வளர்க்கும்போது மீசையும் ஒரு வடிகட்டியாக (Filter) பணிபுரிகிறது. தூசுகளை இழுத்து ஓரளவு தூயகாற்றை உள்ளே அனுப்புகிறது.
3. இந்த நோயானது அதிகமாக ஐஸ்கிறீம், குளிர்பானம் முதலியவற்றை அருந்துவதால் குழந்தைகளைப் பெரிதும் பாதிக்கிறது. எனவே இவற்றைப் பெரிதும் தவிர்ப்பது நல்லது. குளிர் அதிகமுள்ள நாடுகளில் அடிக்கடி ஏற்படும் வெப்பநிலை மாற்றத்தினால் உடலிலுள்ள சிலோத்துமம் (நீரின் அளவு) அதிகமாகி சுவாசப் பைகளின் வெளிச்சுவரில் படர்ந்து அதன் மென் துளைகளினூடாக காற்று உள் செல்லாதவாறு தடுக்கிறது.

4. வாழைப்பழம் சாப்பிடுவதையும் இந்த நோயாளிகள் தவிர்ப்பது நல்லது. ஏனெனில் அதுவும் அதிக அளவு சளியை உற்பத்தி செய்யக்கூடிய தன்மை கொண்டது. எனவே வாழைப்பழத்தை அறவே தவிர்ப்பது சிறந்தது.

5. இந்தநோய் உள்ளவர்கள் இரவில் அதிகமாக உண்பதை நிறுத்த வேண்டும். அத்துடன் எண்ணெய் பதார்த்தங்களை உண்பதைக் குறைக்க வேண்டும்.
6. முடிந்தவரை இந்த நோயாளிகள் மிதமான சூடுள்ள ஆகாரங்களையே உண்பது சிறந்தது.

7. ஆஸ்துமா நோய் உள்ளவர்கள் பெரும்பாலும் இரவு நேரங்களிலேயே பெரும்பாதிப்பு ஆளாகின்றனர். காரணம் சூரியன் மறைந்து விடுவதால் தட்ப வெப்ப நிலையில் மாற்றம் ஏற்படுகிறது. மேலும் இரவு நேரங்களில் தாவர வகைகள் சுவாசிப்பதற்கு பிராணவாயுவை எடுத்துக்கொள்வதால் சுற்றுச்சூழலில் பிராணவாயுவின் அளவும் குறைகிறது. இந்த நோயாளிகளுக்கு ஏற்கனவே உள்ளே சுவாசத்தை இழுக்கும் தன்மையும் குறைந்திருப்பதால் அவர்கள் சிரமத்திற்கு ஆளாக வேண்டி நேரிடுகிறது. அந்த சந்தர்ப்பத்தில் முடிந்தவரை சூடான மிதமான உணவு வகைகளை உண்டும் ஏதாவது புத்தகத்தையோ அல்லது பத்திரிகையையோ வாய்விட்டு படிக்க வேண்டும் அல்லது விருப்பமான பாடல்களையோ இசையுடன் பாடுவதன்மூலம் நோயின் தீவிரத்தை ஓரளவு குறைத்துக் கொள்ளலாம். இது ஒரு முதல் உதவியேயன்றி தீர்வு ஆகாது.

அடுத்த இதழில் ஆஸ்துமாவை நிரந்தரமாக தீர்க்கும் முறைபற்றிக் காண்போம்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
416.289.2033 after 7:00pm


# SAMI DAYCARE



* மாதம் தொடக்கம் 6 வயதுச் சிறார்களுக்குச் சிறந்த பராமரிப்பு
* ECE தகுதி பெற்ற நடத்துனர் * TAX RECEIPT வழங்கப்படும்
* காலை 7:00 மணி - மாலை 6:00 மணி வரை * மாலை 6:00 மணி - மாலை 10:00 மணி வரை * சனி, ஞாயிற்றுக் கிழமைகளிலும் பிள்ளைகள் பராமரிக்கப்படும்

1 Hr. - $3.00
Day - $15.00
Week - $75.00

Summer Daycare - $60 with food & Everything

தினசரி நடவடிக்கைகள் * உள்ளக, வெளியக, விளையாட்டுக்கள், தமிழ் ஆங்கிலம் படிப்பித்தல், இரு நேர உணவு, வெளிப்புறச் சுற்றுலா.

#7 Birchcrest Court (Finch / Warden) Mrs.S.J. சௌந்தரநாயகம் 416-502-3033



# Traffic Signal



